# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 162 சுபகிருது வருடம், தை மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை (03.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ரஜப் - 11, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50


**கமெண்ட் கந்தர்...**








அரசியலமைப்பின் 13ஆவது திருத்த அமுலாக்கம் தொடர்பில் நாளைய சுதந்திர தினத்தன்று விசேட அறிவிப்பொன்றை செய்யத் திட்டமிட்டிருந்தாராம் ரணில்.

ஆனால் மகாநாயக்க தேரர்மாரின் ஆலோசனையை பெறாமல் அப்படியான அறிவிப்பை செய்யவேண்டாமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்பிலிருந்து சென்ற அழுத்தத்தினால்தான் ரணில் நேற்று மகாநாயக்கமாரை சந்தித்தாராம்.

எப்படியோ மகாநாயக்க தேரர்மார் 13ஆவது திருத்தத்தை எதிர்த்து ரணிலுக்கு அனுப்பிய கடிதத்தின் பின்னணியில் பொதுஜன பெரமுனவின் சக்திகள் இருப்பதாக தகவல்.

# 13 வேண்டாம் ரணிலுக்கு எதிர்ப்பு!

## பௌத்த பீடாதிபதிகள் ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் அவசர வேண்டுகோள்


2023.02.01

(நமது நிருபர்)

நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்புக்கு பாரிய பிரச்சினைகளை உருவாக்கும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்த வேண்டாமென பிரதான பௌத்த பீடாதிபதிகள் கையொப்பமிட்ட கடிதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று (02) காலை கையளிக்கப்பட்டது.

சியாம், ராமஞ்ஞ, அமரபுர என்ற மூன்று பௌத்த பீடங்களின்...

02 பக்கம்

# படையினர் வசமிருந்த 109 ஏக்கர் காணி யாழில் இன்று விடுவிப்பு

## சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி பணிப்பு

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பகுதியில் யுத்தத்தின்போது பாதுகாப்புப் படையினர் வசமிருந்த சுமார் 109 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டு, இன்று வெள்ளிக்கிழமை 197 குடும்பங்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

இராணுவத்தினர் வசமிருந்த ஐந்து காணிகளும் கடற்படையினர் வசமிருந்த ஒரு காணியுமே இவ்வாறு மக்களிடம் கையளிக்கப்பட உள்ளன.

பெப்ரவரி 4ஆம் திகதி இலங்கையின் 75ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு வடக்கிலுள்ள காணிகளை விடுவித்து அவற்றை உரிமையாளர்களிடம் கையளிப்பதாக ...

02 பக்கம்

# அமைச்சு செலவுகள் 06 வீதம் குறைப்பு

## திறைசேரியின் செயலாளரால் சுற்றறிக்கை வெளியீடு

(நா. தினுஷா)

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தினூடாக அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 6 சதவீதத்தைக் குறைத்தல் மற்றும் அரச செலவுகளை முகாமைத்துவம் செய்வது தொடர்பான சுற்றறிக்கை திறைசேரியின் செயலாளர் கே.எம்.மஹிந்த சிறிவர்தனவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண சபைகள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்களின் ...

02 பக்கம்

# கொழும்பு உட்பட பல பகுதிகளில் நாளை போராட்டங்கள் முன்னெடுப்பு

## சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஏற்பாடு

(நா. தினுஷா)

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து 75 வருடங்கள் நிறைவடைகின்றபோதிலும் மக்களுக்கான சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவித்து கல்வி, சுகாதாரத் துறை ...

02 பக்கம்

# யாழ். இரத்த வங்கியில் குருதிக்குத் தட்டுப்பாடு

## தானம் செய்ய முன்வருமாறு கொடையாளர்களுக்கு அழைப்பு

02 பக்கம்

# வடக்கு, கிழக்குக்கு தனியான பேராயர்

## வத்திக்கானிடம் கோரிக்கை முன்வைப்பு

இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கென தனியான பேராயர் ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென வத்திக்கானிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. நாட்டில் சிறுபான்மை தமிழ் கத்தோலிக்கர்கள் இலங்கை கத்தோலிக்க சபையால் வஞ்சிக்கப்படுவதாக உணர்ந்ததன் காரணமாக இந்தக் கோரிக்கையை முன்வைத்ததாக அருட்தந்தை ஜோசப் பத்திநாதர் ஜெபரட்ணம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய...

02 பக்கம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை நேற்று (02) சந்தித்து ஆசி பெற்றார்.

# வடக்கு, கிழக்கில் நாளை ஹர்த்தால்

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ். செய்தியாளர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய சுதந்திர தினமான நாளை சனிக்கிழமை ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்த அழைப்பை விடுத்துள்ளது.

இது தொடர்பிலான ஊடகச் சந்திப்பு நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

இந்த ஊடகச் சந்திப்பின்போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவ ஒன்றியத்தினராகிய நாம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுடன்...

02 பக்கம்

# தந்தையைத் தாக்கி கொலைசெய்த மகன்

## கந்தப்பளையில் சம்பவம்

07 பக்கம்

# பெற்றோலின் விலை 30 ரூபாவால் உயர்வு

(கே. சுபானி)

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு லீற்றர் 'ஒக்டேன் 92' பெற்றோலின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 370 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் 'ஒக்டேன் 92' பெற்றோல் 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இந்த விலை அதிகரிப்பு நேற்றுமுன்தினம் (01) இரவுமுதல் அமுலுக்கு வந்துள்ளது. ஏனைய பெற்றோல் வகைகளின் விலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முச்சக்கரவண்டி கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது**

இதேவேளை, பெற்றோல் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், முச்சக்கரவண்டிகளுக்கான கட்டணத்தை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகளின் .....

02 பக்கம்

# மதுபானசாலைகளுக்கு இரு நாட்கள் பூட்டு

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடுமுழுவதுமுள்ள மதுபானசாலைகள் அனைத்தும் மூடப்படவுள்ளதாக மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குறித்து அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுதந்திர தினத்தை முன்னிட்டு நாளை (04) நாடுபூராகவும் உள்ள மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன. அதேபோன்று நாளை மறுதினம் பெப்ரவரி 05ஆம் திகதி பூரணை தினம் என்பதால் அன்றையதினமும் மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன.

மேலும் இன்று வெள்ளிக்கிழமை (03) மதுபானசாலைகள் மூடப்படும் நேரத்துக்கு மூடப்பட்டு எதிர்வரும் 06ஆம் திகதி திங்கட்கிழமையே மீண்டும் திறக்கப்படும்.

அதன்படி எதிர்வரும்...

02 பக்கம்

# ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர் தெரிவு ஆரம்பம்

(நா. தினுஷா)

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கைகள் அரசியலமைப்புப் பேரவையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட 09 ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அரசியலமைப்புப் பேரவையின் தீர்மானத்துக்கமைய அரசியலமைப்பின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குழுக்களின்...

02 பக்கம்

# மின்வெட்டு அமுலாகாது

## மின்சார சபை நீதிமன்றில் உறுதி

(கே. சுபானி)

மனித உரிமைகள் ஆணைக்குழு தாக்கல் செய்துள்ள மனு மீதான பரிசீலனை நிறைவடையும் வரை மின்வெட்டு இடம்பெறாதென இலங்கை மின்சார சபை உயர் நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவை அவமதித்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று...

02 பக்கம்

# தவறானவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தால் அதன் பலனையும் மக்களே அனுபவிக்க வேண்டும்

## பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா வலியுறுத்து

நாட்டின் ஆட்சி பொறுப்பை மீண்டும் தவறானவர்களிடம் ஒப்படைத்தால் அதன் பிரதிபலனையும் மக்களே சந்திக்க நேரிடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



நாங்களே எதிர்க் கட்சியிலிருக்கும் முன்னணி கட்சியாவோம். நாங்களே எதிர்க் கட்சி. எதிர்க்கட்சித் தலைவரும் எங்கள் கட்சியின் தலைவராவார். 45 உறுப்பினர்களை கொண்டிருக்கிறோம். அதனால், ஏனைய சிறிய கட்சிகள் தொடர்பில் நாங்கள் பதற்றமடைய வேண்டிய அவசியமில்லை.

இதற்கு முன்னர் இருந்ததைவிட பிரதிபலன்கள் தற்போது கிடைத்து வருகின்றன என்பது எங்களுக்கு புரிகிறது. எவ்வாறாயினும் மக்கள் நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்தே தீர்மானங்களை எடுக்கவேண்டும். ஒரேமுறையில் வீரர் ஒருவரை ஜனாதிபதியாக நியமித்து அதன் பிரதிபலன்களை அவர்கள் அனுபவித்திருக்கிறார்கள்.

எனவே, மீண்டும் முற்போக்கு சிந்தனையற்ற நிர்வாக அனுபவமில்லாத யாரையாவது தமது உறுப்பினர்களாக மக்கள் நியமித்துக்கொண்டால் அதன் பிரதிபலனையும் மக்களே சந்திப்பார்கள்.

# மின்சார சபைக்கு எதிராக நீதிமன்றில் மனுத் தாக்கல்

இலங்கை மின்சார சபைக்கு எதிராக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் 2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளைக் கருத்திற் கொண்டு மின் துண்டிப்புகளை தடுக்கும் வகையில் இந்த ரிட் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மூன்று இலட்சத்து 31 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பெப்ரவரி 17ஆம் திகதி வரை திட்டமிடப்பட்ட மின்வெட்டை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதிக்கவில்லை.

இந்த காலகட்டத்தில் இதுபோன்ற மின்வெட்டுகள் அங்கீகரிக்கப்படாத மற்றும் சட்டவிரோதமானதாக கருதப்படும் என்றும் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைமனித உரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த வாரம் பல சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, பெப்ரவரி 17 ஆம் திகதி வரை மின்வெட்டை அமுல்படுத்தாமலிருப்பதற்கு இலங்கை மின்சாரசபை, மின்சக்தி அமைச்சு உள்ளிட்ட தரப்பினர் இணக்கப்பாட்டை தெரிவித்திருந்தனர்.

எவ்வாறாயினும், மின்வெட்டை அமுல்படுத்த மாட்டோம் என்று ஒப்புக்கொண்ட போதிலும் அடுத்த இரண்டு நாட்களில் பல பகுதிகளில் மின் துண்டிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சைகளின்போது மின்வெட்டைத் தடுக்கத் தவறியதற்காக பிரதிவாதிகளுக்கு எதிராக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரம் உள்ளிட்ட ஒத்துழைப்புகளை வழங்க பெலருஸ் அரசு இணக்கம்

பொருளாதாரம், சுற்றுலா, கல்வி, சட்ட மறுசீரமைப்பு உள்ளிட்ட அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக பெலருஸ் தூதுவர் நீதி அமைச்சரை சந்தித்தபோது அறிவித்திருக்கிறார். நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேயதாச ராஜபக்ஷ மற்றும் பெலருஸ் நாட்டின் தூதுவர் என்ட்ரி ர்ஹூஸ்கி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நீதி அமைச்சில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்.

2013ஆம் ஆண்டு இலங்கை மற்றும் பெலருஸ் ஆகிய நாடுகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட இருத்தரப்பு ஒப்பந்தத்தை பலப்படுத்துமாறும் நீதி அமைச்சர் தூதுவரிடம் கோரியிருக்கிறார்.

பெலருஸ் நாட்டின் பிரஜைகள் இருவர் இலங்கையின் சிறைச்சாலையில் இருப்பதும் அவர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்ட நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இதுதொடர்பில் ஆராய்ந்து சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பது குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை மாணவர்கள் பெருமளவில் பெலருஸ் உயர் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதுடன் இவ்வாறு கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க முடியும் என்றும் அதற்கான உதவிகளை பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தூதுவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

### மதுபானசாலைகளுக்கு...

04ஆம், 05ஆம் ஆகிய இருதினங்களும் நாடுபூராகவும் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடக்கு, கிழக்கில்...

ஒன்றிணைந்து இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியினை கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி, ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்புக்கள், அடக்கு முறைகளை எதிர்த்தும், ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவம் எமது மண்ணிலிருந்து வெளியேற வேண்டும் என்பதை வலியுறுத்தியும், தமிழ்த் தேசிய இனத்தின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும், இலங்கையின் இன்றைய பொருளாதாரப் பின்னணியில் எழுந்துள்ள சூழலில் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் காரணமாக முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுவார்த்தை எனும் போலி நாடகத்தினை தோலுரித்து சர்வதேச சமூகத்திற்கு காட்ட வேண்டிய அவசியத்தாலும், கூட்டாக தமிழ் மக்கள் தமது நிலைப்பாடுகளை வலுவாக முன்வைக்க வேண்டியதன் அவசியத்தின் அடிப்படையிலும் வடக்கிலிருந்து கிழக்கு வரையான பேரணியொன்றைத் திட்டமிட்டு ஊடகத்தினரை கடந்த ஜனவரி 26ஆம் திகதி சந்தித்திருந்தோம்.

அதன் பின்னர் எமது கரிநாள் பிரகடனம் மற்றும் பேரணிக்கான நிலைப்பாடுகளை எமது மக்களுடன் கலந்துரையாடும் நோக்குடன் கடந்த ஒரு வார காலமாக வடக்கு கிழக்கெங்கும் மக்களுடனும், மக்கள் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தினர், மதத் தலைவர்கள் மற்றும் மாணவர்களுடனும் பல சந்திப்புக்களை முன்னெடுத்திருந்தோம்.

அனைத்து தரப்பினரும் மாணவர்களாகிய நாம் முன்னெடுத்துள்ள நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் மிகவும் வரவேற்றதோடு, முழு ஒத்துழைப்பை நல்குவதாகவும் கூறி நின்றனர். அத்தோடு பேரணி தமிழர் தேசத்தின் அடிப்படைகளை முன்னிறுத்தி நிற்க வேண்டும் எனவும் வலியுறுத்தி நின்றனர். இது மட்டுமல்லாது, இன்றைய தமிழ்த் தேசிய அரசியல் நிலைமைகளில் மாணவர்களே தீர்க்கமாக விடுதலைப் போராட்டத்தினை கையிலெடுத்து முன்செல்ல வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். இக்கருத்துக்கள் யாவும் எம்மையும், நாம் முன்னெடுக்கும் எழுச்சிப் பேரணியையும் வலுப்படுத்துவதாகவே நாம் காண்கிறோம்.

அந்த வகையில், தமிழ் மக்கள் மிகப் பேரெழுச்சியுடன் கூட்டாக தமிழ் மக்களின் அபிலாஷைகளான பொங்கு தமிழ் எழுச்சியினூடாக வலியுறுத்தப்பட்ட சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவற்றை முன்னிறுத்தி முன்னெடுக்கும் இப் பேரணியை மேலும் வலுப்படுத்த வடக்கு, கிழக்குத் தழுவிய எமது வர்த்தக சமூகத்தினரையும் கடற்றொழிலாளர்கள், தனியார் மற்றும் அரச பஸ் உட்பட அனைத்து தொழிற்சங்கங்களையும் பெப்ரவரி 4 கரிநாள் அன்று தொழில் புறக்கணிப்பையும், முழுமையான கடையடைப்பையும் மேற்கொண்டு ஹர்த்தாலை முழுமையாக அனுஷ்டித்து ஸ்ரீலங்காவின் சுதந்திர தினம் தமிழர் தேசத்தின் கரிநாள் என்பதை சர்வதேச நாடுகளுக்கு வெளிப்படுத்த வேண்டுமென்றும் உரிமையுடன் கேட்டு நிற்கின்றோம். அத்துடன் இத்தினத்தில் உங்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள், தொழில் இடங்களில் கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு காலாகாலமாக நாம் சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைக்கும், ஆக்கிரமிப்புக்கு எதிராக தமிழர் தேசமாக முன்னெடுக்கும் போராட்டத்தில் இணைத்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி முன்னெடுக்கப்படும் இப் பேரணியானது பெப்ரவரி 4ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி நாச்சிமார் கோவிலடியூடாக பிரதான தபால் அலுவலகம், தமிழாராய்ச்சி மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம், ஆஸ்பத்திரி வீதி வழியாக கச்சேரியடியை வந்தடைந்து பின்னர் செம்மணியை சென்றடையும். செம்மணியிலிருந்து வாகனங்களில் பயணிக்கும் பேரணியானது நாவற்குழி, சாவகச்சேரி, கொடிகாமம், மிருசுவில், பளை, ஆனையிறவு, பரந்தன் ஊடாக கிளிநொச்சியை சென்றடைந்து முதலாம் நாளின் இறுதி நிகழ்வை இரணைமடுவில் நிறைவு செய்து கொள்ளும்.

இரண்டாம் நாள் பேரணி பெப்ரவரி 5ஆம் நாள் காலை 9 மணிக்கு பரந்தனில் ஆரம்பமாகி வவுனியா மற்றும் மன்னார் எழுச்சி அணிகளை இணைத்துக் கொண்டு காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு நோக்கி புறப்படும். செல்லும் வழியில் புளியம்பொக்கணை, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, மூங்கிலாறு ஊடாக புதுக்குடியிருப்பை வந்தடையும். அங்கிருந்து முள்ளிவாய்க்கால் சென்று உறுதியெடுத்துக் கொண்டு முல்லைத்தீவைச் சென்றடையும்.

ஊடறுத்துச் செல்லும் அனைத்து ஊர்களிலும் அணிதிரளும் மக்களுடன் எழுச்சியாய் முன்னேறி முல்லைத்தீவை சென்றடையும் பேரணி இரண்டாம் நாளின் இறுதி நிகழ்வை முல்லைத்தீவில் நிறைவு செய்யும்.

மூன்றாம் நாள் பெப்ரவரி 6ஆம் திகதி காலை 7.30 மணிக்கு முல்லைத்தீவிலிருந்து ஆரம்பமாகி திருகோணமலை மாவட்டத்தின் தென்னமரவாடியூடாக திருகோணமலையை மதியம் 1.30 மணியளவில் வந்தடையும் பேரணி, திருகோணமலையின் எழுச்சி நிகழ்வுகளில் இணைந்து கொள்ளும். பின்னர் திருகோணமலை மாவட்டத்தின் வெருகலில் மூன்றாம் நாள் நிகழ்வினை நிறைவு செய்யும்.

நான்காம் நாள் பெப்ரவரி 7ஆம் திகதி காலை 10 மணிக்கு பேரணி வெருகலிலிருந்து ஆரம்பமாகி வாகரை சென்று அங்கிருந்து மட்டுநகரை வந்தடையும். அதேநேரம் அம்பாறை மாவட்டத்திலிருந்தும் பேரெழுச்சியாக மக்கள் வந்து இணைந்து மாபெரும் பொதுக் கூட்டத்துடன் நிறைவு பெறும்.

இப்பேரணிகளில் மாணவர்கள், மதத்தலைவர்கள், பொதுமக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் தரப்பினர் அனைவரும் அலை அலையாக இணைத்து தமிழ்த் தேசத்தின் நிலைப்பாட்டினை முழு உலகத்திற்கும் வெளிப்படுத்த அணிதிரளுமாறு அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது.

### கொழும்பிலும்...

உள்ளிட்ட சமூக பாதுகாப்பு சேவையை பாதுகாக்கும் நோக்கில் மாணவர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தேசிய சுதந்திர தினமான நாளை (04) கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

மக்கள் போராட்ட இயக்கம், அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், இலங்கை ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட மேலும் சில தொழிற்சங்கங்கள் சில அரசியல் கட்சிகள் கொழும்பின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்திருக்கின்றன.

இதேவேளை, 'தமிழருக்கு இருள்' என்ற தொனிப்பொருளில் நாளை (04) மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்துக்கு அருகில் இலங்கை தமிழரசு கட்சி ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்க தீர்மானித்திருக்கிறது.

மேலும், மக்கள் பல்வேறு நெருக்கடியை சந்தித்துள்ள தற்போதைய நிலையில் மில்லியன் கணக்கான ரூபாக்களை செலவழித்து சுதந்திரத் தினத்தை கொண்டாடும் ரணில் - ராஜபக்ஷக்களுக்கு எதிராக இன்று (03) மருதானையில் அமைதி போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதுடன் இன்று பிற்பகல் 3.00 மணிமுதல் நாளை பிற்பகல் 3.00 வரையில் சத்தியாக்கிரக போராட்டமொன்றும் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### பெற்றோலின்...

தொழிற்சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இரண்டு மூன்று தடவைகள் பெற்றோலின் விலை 100 ரூபாவால் குறைக்கப்பட்டபோது முச்சக்கரவண்டி கட்டணத்தை குறைக்காததால் இம்முறை கட்டணத்தை அதிகரிக்கப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மின்வெட்டு...

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மின்சாரசபை இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதன்படி குறித்த மனு இன்று பரிசீலனைக் குட்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யசந்த கோதாகொட, ப்ரீதிபத்மன் சூரசேன மற்றும் ஷிரான் குணரத்ன உள்ளிட்ட உயர்நீதிமன்ற நீதிபதிகள் உள்ளடங்கிய குழு முன்னிலையில் மேற்படி மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மின்சார சபை இவ்வாறு உறுதியளித்துள்ளது.

### அமைச்சு செலவுகள்...

தலைவர்கள், சட்ட சபைகள் மற்றும் அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சம்பளம் மற்றும் கொடுப்பனவு, மருத்துவ விநியோகம், வரி வசூலிப்பு மற்றும் உள்ளூராட்சி மன்ற வரி, ஓய்வூதிய கொடுப்பனவு, தேசிய கடனுக்கான வரி செலுத்துகை, வெளிநாட்டு கடனுக்கான வரி செலுத்துகை, திறைசேரி கணக்குகள் மற்றும் பிணைமுறை நிலைப்பாட்டு மட்டம், அத்தியாவசிய நலன்புரி செலுத்துகை மற்றும் அரசியலமைப்பு ரீதியாக அல்லது ஒப்பந்தங்கள் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகளில் 6 சதவீதத்தை குறைக்க வேண்டும் என்று அந்த சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செலவுகளை குறைப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட வழிமுறைகளை உள்ளடங்கிய திருத்தப்பட்ட செலவு ஒதுக்கீடு எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் தேசிய வரவு - செலவுத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பொறுப்புடைய அதிகாரிகளுக்கு, ஆவணக் கடிதத்துடன் மேற்குறிப்பிட்ட பிரிவுகள் மின்னஞ்சலினூடாக அனுப்பிவைக்க வேண்டும்.

மேலும், தற்போது இருக்கும் வளங்களை பயன்படுத்தி வர்த்தக நடைமுறை மறுசீரமைப்பு, உகந்த தொகை முகாமைத்துவம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயன்பாடு, தொழில்நுட்பமயமாக்கம், ஒன்லைன் முறையை விநியோகித்தல் போன்ற செயற்பாடுகளை இனங்கண்டு நிறுவனத்தின் செலவுகளை குறைப்பதற்கு நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின், நீர், தொலைபேசி சேவை, எரிபொருள் மற்றும் ஏனைய ஒப்பந்த அடிப்படையிலாக சேவைகளுக்கான செலவுகளை குறைப்பதற்காக உரிய செலவு முகாமைத்துவம் செய்தல் வேண்டும். மேலதிக நேரம் மற்றும் விடுமுறை கொடுப்பனவு மற்றும் வேறு கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் குறைந்தது நூற்றுக்கு 6 சதவீதம் குறைக்கப்படவேண்டும். எரிபொருள், போக்குவரத்து மற்றும் செயற்பாட்டு குத்தகை முறையிலிருக்கும் வாகனங்களுக்காக தவணைக் கொடுப்பனவு தொடர்பிலான செலவுக்கான உத்தியோகப்பூர்வ வாகனம் கொண்ட அதிகாரிகளின் வாகனங்களை நிறுவனங்களின் வாகனங்களாக பயன்படுத்துவதுடன் வாடகை அடிப்படையிலான வாகனங்களை பயன்படுத்த முடியாது.

இதேவேளை, இந்த ஒதுக்கீட்டு குறைப்பானது பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குதல், சமுர்த்தி, முதியவர்கள், சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவு, மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவு, கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசணை உணவு, ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்காக காலை உணவு, அதிக மந்த போசணை நிலையிருக்கும் சிறுவர்களுக்கான போசாக்கு உணவு, திரிபோசா வேலைத்திட்டம், பாடசாலை போசணை வேலைத்திட்டம் உள்ளிட்ட பாடசாலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நலன்புரி ஒதுக்கீடுகள் பொருந்தாது.

2023.01.16ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அரச வங்கி, கூட்டுத்தாபனம், அரசியலமைப்பு ரீதியாக சபைகள், அரச நிறுவனங்கள் மற்றும் மேலதிக அரச செயற்பாடுகளுக்காக 2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டில் 6 சதவீதம் குறைக்கப்படவுள்ளது.

### ஆணைக்குழுக்களுக்கு...

உறுப்பினர்களை நியமனம் செய்வதற்காக, தேவையான தகைமைகளைப் பெற்றிருக்கும் தனியாட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக அந்தப் பேரவை அறிவித்திருக்கிறது.

அதற்கமைய தேர்தல் ஆணைக்குழு, அரசாங்க சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு மற்றும் தேசிய பெறுகை ஆணைக்குழு என்பவற்றுக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவிருக்கிறார்கள்.

இதற்கான விண்ணப்பங்கள், www.parliament.lk என்னும் பாராளுமன்ற இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும். மாதிரிக்கு இணங்க தயாரிக்கப்பட்டு முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### 13 வேண்டாம்...

தலைவர்கள் கையொப்பமிட்ட இந்த கடிதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட நீங்கள் 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு செயற்படுகின்றீர்கள்.

இந்த அறிக்கை நாட்டில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள், "புராதன, வரலாற்று நினைவுச்சின்னப் பதிவுகள் மற்றும் மதச் சங்கங்களின் கட்டுப்பாடு உள்ளிட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு மாகாண பைகளுக்கு அதிகாரம் வழங்குவதன் மூலம் நாட்டில் பிரிவினைவாதத்தை மேலும் அமுல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படுகின்றன.

இதில் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் முன்னைய நிறைவேற்று ஜனாதிபதிகளால் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை. நாட்டில் ஏற்படக்கூடிய குழப்பங்களையும் அதன் தீங்கையும் அவர் புரிந்துகொண்டதால் அவ்வாறு செய்வதைத் தவிர்த்தார்கள். அதை நீங்களும் நன்கு அறிவீர்கள். நிறைவேற்று அதிகாரம் மக்களின் இறையாண்மையைப் பாதுகாக்கும் பொறுப்புக்குக் கட்டுப்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் சுயாட்சியை குலைக்கும் இதுபோன்ற அரசியல் சட்டத் திருத்தங்களை குடியரசுத் தலைவர் அமுல்படுத்த முனைவது பொதுமக்களிடம் கடும் அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் பிராந்திய மற்றும் உலக சக்திகளின் ஆதரவைப் பெறுவதற்காக சில நிபந்தனைகளுக்கு உடன்படுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டபோதிலும், நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் சுதந்திரம் போன்றவற்றிற்காக இதுபோன்ற ஆபத்தான முன்மொழிவுகளை நிராகரிக்க நாம் பாடுபட வேண்டும்.

73ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இலங்கையர்களாகிய நாம் சாதி, மதம், நாட்டின் பாதுகாப்பு மற்றும் செழுமைக்காக நாம் எவ்வாறு நம்மை தியாகம் செய்தோம் என்பதற்கு நமது வரலாற்றில் சான்றுகள் பல உள்ளன.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, இந்த நாட்டில் நாம் பல விரும்பத்தகாத அனுபவங்களை எதிர்கொண்டுள்ளோம். அதனால் நேரடியாக பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்யவும், மக்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக மாற்றவும் அரசாங்கம் கடுமையாக உழைத்து வருகிறது.

அந்த மாகாணங்களில் இருந்து மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த கபினட் அமைச்சர்கள் பதவிகளிற்கு நியமிக்கப்பட்டவர்கள் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் ஒரு பாத்திரத்தை வகிக்க இடம் உள்ளது என்பதை நாங்கள் நன்கு அறிவோம்.

ஆனால் பிரிவு 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது நாட்டின் நிர்வாகத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது என்பது இரகசியமல்ல.

எனவே நாட்டின் சுதந்திரம், பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான கடுமையான பிரச்சினைகளை உருவாக்கும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அமுல்படுத்தப்படவே கூடாது என மகாசங்கத்தினராகிய நாங்கள் வலியுறுத்துகிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வடக்கு, கிழக்குக்கு...

வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயர்கள் வத்திக்கானிடம் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறுதின தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தோருக்காக கொழும்பு பேராயர் நீதி கேட்பதில் தவறில்லை. ஆனால் வழக்கு, கிழக்கு யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு நீதி வழங்க எவரும் முன்வராமை குறித்தும் பேசப்பட வேண்டுமென அருட்தந்தை ஜெபரட்ணம் குறிப்பிட்டுள்ளார்.

### யாழ். இரத்தவங்கியில்...

*(யாழ். செய்தியாளர்)*

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக யாழ் போதனா வைத்தியசாலை தெரிவித்துள்ளது. இதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாமையால் அடுத்த இரத்ததான முகாம் 4ஆம் திகதியே நடைபெறவுள்ளதாகவும், அதுவரை நோயாளர்களுக்கான குருதியை வழங்க போதாமை நிலவுவதாகவும் அறிவித்துள்ளது.

எனவே ஏற்கனவே குருதிக்கொடை வழங்கி நான்கு மாதங்கள் பூர்த்தியான குருதிக் கொடையாளர்களும் புதிய குருதிக் கொடையாளர்களும் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

இது தொடர்பிலான மேலதிக தகவல்களுக்கு 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். இரத்த வங்கி மேலும் தமது அவசர நிலைமையினை குறிப்பிட்டுள்ளது.

### படையினர் வசமிருந்த...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் பாதுகாப்புத் துறையின் முழு கண்காணிப்புடன் இந்தக் காணி விடுவிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதற்காக காணி உரிமையாளர்கள் வெளிப்படைத்தன்மையுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில், யுத்தத்தினால் இடம்பெயர்ந்து தொடர்ந்தும் பருத்தித்துறையிலுள்ள 09 முகாம்களில் தங்கியுள்ள 75 குடும்பங்களுக்கு பலாலி வடக்கு பிரதேசத்தில் உள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான சுமார் 13 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இவ்வாறு விடுவிக்கப்படும் காணியில் அமைந்துள்ள மாநகர சபை மண்டபம், அன்றைய தினமே வலிகாமம் வடக்கு பிரதேச சபையிடம் கையளிக்கப்படவுள்ளது. இதேவேளை, மீளக்குடியமர்த்தப்படும் 197 குடும்பங்களுக்கும் மீள்குடியமர்வுக்கு அவசியமான உதவு தொகையை உடனடியாக வழங்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீள்குடியேற்ற அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு நிதி உத்தரவாதம் வழங்க பரிஸ் கிளப் தயார்

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் விரிவாக்கப்பட்ட நிதி வசதியைப் பெறுவதற்குத் தேவையான கடன் மறுசீரமைப்பு உத்தரவாதங்களை இலங்கைக்கு வழங்க பரிஸ் கிளப் (Paris Club) தயாராகவுள்ளது.

பெரும் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு கடன் மறுசீரமைப்பில் "விரைவில்" தமது ஆதரவை பரிஸ் கிளப் அறிவிக்கவுள்ளதாக விடயத்துடன் தொடர்புடைய ஒருவர் சர்வதேச ஊடகமொன்றுக்கு (ரொய்ட்டர்ஸ்) தெரிவித்துள்ளார்.

நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் இலங்கை, கடந்த செப்டெம்பரில் பணியாளர்மட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

எனினும், இந்த நிதித் திட்டத்தை பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின் ஒப்புதல் பெறுவது அவசியம்.

அந்த ஒப்புதலைப் பெற, முக்கிய இருதரப்பு கடன் வழங்குபவர்களிடமிருந்து நிதி உத்தரவாதத்தைப் பெறவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

பரிஸ் கிளப்பின் உறுப்பினர் அல்லாத சீனாவும் இந்தியாவும், இலங்கைக்கான இருதரப்பு கடன் வழங்குநர்களில் முன்னணியில் உள்ளன.

எவ்வாறாயினும், அண்டைநாடான இலங்கையின் கடன் சுமையை குறைக்க உதவுவதற்கு முன்வந்த இந்தியா, அதற்கான நிதியியல் உத்தரவாதங்களை அளித்தது.

மேலும் சீனாவின் எக்ஸிம் வங்கி கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு அனுப்பிய கடிதத்தில், இரண்டு வருட கடன் இரத்து கால அவகாசத்தை வழங்கியது.

சீனாவின் இந்த உறுதிமொழிகள் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் இதுவரை எந்த நிலைப்பாட்டையும் அறிவிக்கவில்லை.

எவ்வாறாயினும், பீஜிங் போதுமானதைச் செய்யவில்லை என்று கொழும்புக்கு விஜயம்செய்த அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான துணை செயலாளர் விக்டோரியா நுலண்ட் செய்தியாளர்களிடம் நேற்று கூறினார்.

"சீனா இதுவரை வழங்கிய உத்தரவாதம் போதாது. அவர்கள் IMF கடன் நிவாரணத்தைப் பெற நம்பகமான மற்றும் குறிப்பிட்ட உத்தரவாதங்களை நாம் எதிர்பார்க்க வேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா, சர்வதேச நாணய நிதியத்தின் மிகப்பெரிய அங்கத்தவர்களில் ஒருவராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Club de Paris
Paris Club

## தினசரி பலாபலன்கள்

சுபகிருது வருடம் தை மாதம் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்:** மற்றவர்கள் முடியாது என்று கைவிட்ட செயலை இலகுவில் முடித்துக் காட்டுவீர்கள், நண்பர்கள் உதவுவார்கள்.

**ரிஷபம்:** குடும்பத்துக்கான செலவுகளை இன்று நீங்கள் பொறுப்பேற்பீர்கள், குதர்க்க வாத விவாதங்களை தவிருங்கள்.

**மிதுனம்:** உங்கள் உடல் இன்று ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும், புகழ் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கடகம்:** கணவன்-மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம், உணவு, உறக்கம் தடைப்படும் நாள்.

**சிம்மம்:** அரசாங்க வகையில் பல சலுகைகள் நீங்கள் கேட்காமலேயே கிடைக்கும், மூத்தவர்களின் ஆலோசனைகளை ஏற்பீர்கள்.

**கன்னி:** தொழில்-வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள், நீங்கள் விரும்பிய தொழில் மாற்றம் அமையும்.

**துலாம்:** ஆலய தரிசனத்தால் மன நிறைவு அடைவீர்கள், தான தர்மங்களால் புண்ணியம் சேர்ப்பீர்கள்.

**விருச்சகம்:** கடவுள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள், மனதைக் கெடுத்துக் கொள்ளாது அமைதியாக இருங்கள்.

**தனுசு:** எதிர்பாராத வகையில் உங்கள் புகழ், அந்தஸ்து உயரப் போகின்றது, அரச வகையில் இலாபம் உண்டு.

**மகரம்:** கலங்கிப்போயிருந்த மனம் ஆறுதல் அடையப் போகின்றது, இன்றைய நாள் உங்களுடையது. நல்லதையே நினையுங்கள்.

**கும்பம்:** அரச உயர் அதிகாரிகளை வீணே பகைத்துக்கொள்ளாதீர்கள், ஆழம் அறியாது காலை விடாதீர்கள்.

**மீனம்:** உண்மையான உறவு என்ன என்பதை கற்றுக்கொள்ளப்போகின்றீர்கள், முயற்சிகள் எடுத்தாலும் தடைகள் உண்டு

| | |
|---|---|
| திதி | : திரயோதசி பி.ப. 6.58 வரை பின் சதுர்தசி |
| நட்சத்திரம் | : புணர்பூசம் முழுவதும் |
| யோகம் | : சித்த யோகம் (சுப காரியம் நன்மை) |
| வார சூலை | : தென் கிழக்குத் திசை நோக்கி சுப காரியம் கூடாது |
| நல்ல நேரம் | : மு.ப. 6.33 – 7.33 மணி வரை |
| ராகு காலம் | : 11.03 – 12.33 மணி வரை |
| எமகண்டம் | : 2.33 – 5.03 மணி வரை |
| குளிகை | : 8.03 – 9.33 மணி வரை |
| சந்திராஷ்டமம் | : விருச்சிக ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும் |
| விஷேட தினம் | : மாத சிவராத்திரி |

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# தமிழ் அரசியல் கைதிகள் மூவர் விடுதலை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மூவர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுவிக்கப்பட்டவர்களில் இருவர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள்.

மன்னாரைச் சேர்ந்த விக்டர் ரொபின்சன் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டவர். 2014ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குணசிங்கம் கிருபானந்தம் 2008ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டிருந்தார். கடந்த மாதமே அவருக்கு 6 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் இருவரும் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லையா சதீஸ்குமார் 2007ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். கிளிநொச்சி வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் சாரதியான இவருக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. தனது தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ளார்.

இதனால் அவர் நேற்று விடுவிக்கப்படவில்லை. மேன்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றதும் விடுவிக்கப்படுவார்.

# ராஜபக்ஷக்களின் ஊழல் கலாசாரத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி முற்றுப்புள்ளி வைக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு





உள்ளூராட்சி மன்றங்களின் வெற்றியுடன் இந்நாட்டின் அரசியல் கலாசாரத்தை ஐக்கிய மக்கள் சக்தி மாற்றியமைப்பதாகவும், தவிசாளர்களுக்கு, பிரதி தவிசாளர்களுக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு ஒப்பந்தம் செய்தல், மக்கள் வளத்தைப் பயன்படுத்தி பிரதிநிதிகள் வளமடைவது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், ராஜபக்ஷர்கள் உருவாக்கிய மோசடி மற்றும் ஊழல் கலாசாரத்தை ஐக்கிய மக்கள் சக்தி முற்றாக இல்லாதொழிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இன்று இனவாதம், இன பேதம், மதவாதம் மத பேதம் என்பன தோற்றுப்போயுள்ளதாகவும், இனவாதத்தையும், மதவாதத்தையும் விதைத்து நாட்டை அழித்த ராஜபக்ஷர்களின் மொட்டின் கதையும் முடிந்துவிட்டது என்றாலும், தற்போது யானையும் மொட்டும் ஒன்றுசேர்ந்து மக்களின் மீது வரியை சுமத்தி மக்களுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் சஜித்பிரேமதாசவை தோற்கடிக்க யானை - மொட்டு சதி நடந்தது போல், தற்போது மக்களை படுபாதாளத்தில் போட யானை - மொட்டு சதியொன்று இடம்பெற்று வருவதாகவும், இந்த சதியை முறியடிக்கும் பொறுப்பு மக்களுடையது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு நாட்டின் அரசாங்கம் முதுகெலும்புடன் சரியான நிலைப்பாட்டிலிருந்து சர்வதேச அமைப்புகளை கையாள்வதுடன், நாட்டு நலனுக்கான தீர்மானங்களை எடுக்க வேண்டுமே தவிர, மக்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடாதென தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்தாலும், அந்த ஒப்பந்தம் மக்களின் வாழ்வை அழிக்காது, மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்பும் விதமாகவே மேற்கொள்ளும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (01) கிண்ணியாவில் இடம்பெற்ற தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# விசேட அதிரடிப்படையினரின் மூன்று பஸ்கள் மோதி விபத்து!

## காயங்களுடன் 9 பேர் வைத்தியசாலையில்




சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் ஒத்திகைக்காக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குழுவை ஏற்றிச்சென்ற பொலிஸ் விசேட அதிரடிப்படைக்குச் சொந்தமான மூன்று பஸ்கள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்து நேற்று (02) அதிகாலை 5.30 மணியளவில் காலி - கொழும்பு பிரதான வீதியில் பாணந்துறை நல்லுருவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த 09 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# குருநாகல் மாநகர சபையின் புதிய மேயராக சுமேத அருண ஷாந்த தெரிவு

குருநாகல் மாநகர சபையின் புதிய மேயராக ஐக்கிய மக்கள் சக்தியின் சுமேத அருண ஷாந்த மேலதிக வாக்குகளால் நேற்று (02) தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மேயர் பதவிக்காக சுமேத அருண ஷாந்த மற்றும் விஜயானந்த வெடிசிங்க ஆகியோர் போட்டியிட்டனர்.

இதன்போது சுமேத அருண ஷாந்தவிற்கு 10 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், விஜயானந்த வெடிசிங்க 06 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகியன சரிசமனான ஆசனங்களை வென்றமையால், திருவுலச்சீட்டினூடாக நகர மேயராக துஷார சஞ்ஜீவ தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த ஆண்டுக்கான மாநகர சபையின் வரவு-செலவுத்திட்டம் தோற்கடிப்பட்டமையால், அவரை பதவி நீக்குவதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுத்திருந்தார். அதற்கமைய, புதிய மேயருக்கான வாக்களிப்பு நேற்று (02) நடத்தப்பட்டது.

# ஏழு உயிர்களைக் காவுகொண்ட நானுஓயா – ரதல்ல பஸ் விபத்து

## பஸ் சாரதிக்குப் பிணை



நானுஓயா – ரதல்ல குறுக்கு வீதியில், கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பஸ் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா நீதவான் நீதிமன்றில் அவர் நேற்று (02) முன்னிலைப்படுத்தப்பட்டபோது, 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் ஒரு இலட்ச ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்லவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுவரெலியாவிலிருந்து பாடசாலை மாணவர்களுடன் கொழும்பு நோக்கி பயணித்த பஸ் ஒன்று நுவரெலியா நோக்கிச்சென்ற வேன் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், முச்சக்கரவண்டி ஒன்றுடனும் மோதி விபத்துக்குள்ளானது.

கடந்த ஜனவரி 20ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் வேனில் பயணித்த 6 பேரும் முச்சக்கவரவண்டி சாரதியுமாக 7 பேர் உயிரிழந்ததுடன், 53 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'Slave Island' வீதியென்ற ஆங்கிலப் பெயரை மும்மொழிகளிலும் மாற்றத் தீர்மானம்

## அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்பு

'Slave Island' என்ற ஆங்கிலப் பெயரை உடனடியாக 'கொம்பனித் தெரு' என மாற்றுமாறு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று (02) தெரிவித்தார்.

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த பெயரை மாற்ற முடிவுசெய்ததாக அவர் கூறினார்.

பெயரை மாற்றுவதற்கு உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தார்.




'Slave Island' என்ற பெயர் மூன்று மொழிகளிலும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) உச்சரிக்க வசதியாக மாற்றப்பட்டது.

இது தொடர்பில் தபால் மா அதிபர் மற்றும் மாநகர சபை ஆணையாளர் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமல்போயிருந்த வர்த்தகர் தலங்கம பகுதியில் சடலமாக மீட்பு

சில நாட்களாக காணாமல்போயிருந்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் சடலம் தலங்கம பெலவத்தையில் உள்ள அவரது சொகுசு மூன்று மாடி வீட்டின் நீச்சல் தடாகத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் கண்டெடுக்கப்படும்போது நிர்வாணமாக இருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வெல்லம்பிட்டிய கிட்டம்பஹுே பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய ரொஷான் வன்னிநாயக்க என்பவரே இவ்வாறு மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி வீட்டிலிருந்து சென்ற சகோதரர் இதுவரை வீடு திரும்பவில்லை என உயிரிழந்தவரின் சகோதரி வெல்லம்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தொழிலதிபரின் மர்ம மரணம் தொடர்பாக, நுகேகொட குற்றப்பிரிவு குற்றவியல் ஆய்வக அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தலங்கம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரொஷான் அனுருத்தவின் பணிப்புரையின்பேரில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# அநுராதபுரம் புனித ஜயஸ்ரீ மஹாபோதிக்கு வெடிமருந்துடன் உள்நுழைந்தவர் கைது

(அநுராதபுரம் செய்தியாளர்)

அநுராதபுரம் புனித ஜயஸ்ரீ மஹாபோதியின் வடக்கு நுழைவாயிலூடாக ஒருதொகை வெடிமருந்துகளையும் சேவா நூல் ஒன்றினையும் எடுத்துக்கொண்டு உட்புகுந்த நபரொருவரை கடமையில் இருந்த பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (01) காலை ஜயஸ்ரீ மஹாபோதியின் வடக்கு நுழைவாயில் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சந்தேக நபருடய பயணப் பையை பொலிஸார் பரிசோதனைக்குட்படுத்தியபோது 32 கிராமிற்கும் அதிகமான வெடிமருந்தையும் சேவா நூல் ஒன்றினையும் அநுராதபுரம் உடமலுவ பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் 54 வயதுடைய காலி, பிட்டிகல தல்கஸ்வெவ பகுதியை வசிப்பிடமாகக்கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் வெடிமருந்தை எடுத்துக்கொண்டு போதிக்குள் என்ன நோக்கத்திற்காக பிரவேசித்தார் என்பதை அறிந்துகொள்ள சந்தேகநபரை உடமலுவ பொலிஸார் அநுராதபுரம் தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். தலைமையகப் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, பெப்ரவரி 03ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# திருந்தா தேசம்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று கண்டியில் மகாநாயக்க தேரர்களை சந்தித்து பேசினார் என்ற செய்தியை ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டு சில நிமிடங்கள் கூடச் செல்லவில்லை. அந்தோ, அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டாமென்று மகாநாயக்க தேரர்கள் கூறியதாக செய்தி வெளியே வந்தது. சியம், ராமஞ்ஞ மற்றும் அமரபுர பீடங்களின் தேரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் சாராம்சம் இதுதான்.

***"மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, இந்த நாட்டில் நாம் பல விரும்பத்தகாத அனுபவங்களை எதிர்கொண்டுள்ளோம். அதனால் நேரடியாக பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்யவும் மக்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியாக மாற்றவும் அரசாங்கம் கடுமையாக உழைத்து வருகிறது.***

***அந்த மாகாணங்களில் இருந்து மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த கெபினட் அமைச்சர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் ஒரு பாத்திரத்தை வகிக்க இடம் உள்ளது என்பதை நாங்கள் நன்கு அறிவோம்.***

***ஆனால், பிரிவு 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்தி மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவது நாட்டின் நிர்வாகத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது என்பது இரகசியமல்ல.***

***எனவே, நாட்டின் சுதந்திரம், பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான கடுமையான பிரச்சினைகளை உருவாக்கும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அமுல்படுத்தப்படவே கூடாது என மகாசங்கத்தினராகிய நாங்கள் வலியுறுத்துகிறோம்"*** என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்தன அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய அரசியல் யாப்பே இலங்கையில் இப்போதும் நடைமுறையில் அதிகாரபூர்வமாக இருக்கும் அரசியல் யாப்பாகும். அது பல திருத்தங்களை பின்னர் நிறைவேற்றியது. 1987ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்திய – இலங்கை சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து 13ஆவது தடவையாக அரசியல் யாப்புத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலமே இலங்கையில் மாகாண சபைகள் என்னும் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அதன் பிரகாரமே மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கல் என்னென்ன விடயங்களில் எந்தெந்த அளவில் இருக்கும் என்பவை போன்ற விடயங்களும் அரசியல் யாப்பு ரீதியில் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டன.

இந்த மாகாண சபை அமைப்புகள் இலங்கைக்கு புதினமானவையல்ல. தென்னிலங்கையில் கடந்த பல வருடங்களுக்கு மேலாக இவை தங்கு தடையற்று சிங்களவர்களை மிகவும் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களில் செயற்பட்டு வருகின்றன என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. வடக்கு – கிழக்கு மாகாணங்களை இணைத்த மாகாண சபையானது பதினாறு மாதங்கள் மட்டுமே செயற்பட முடிந்தது. 2007ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மாகாண சபை நிர்வாகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

சிலர் 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்பட்டாலே போதும் என்கின்றனர். ஆனால், வேறு சிலர் 13ஆவது திருத்தம் போதாது - அதைவிடக் கூடுதலாகத் தரப்பட வேண்டும் என்கின்றனர். இதர சிலர் 13ஆவது திருத்தமே கூடாது. அது முற்றாக நீக்கப்பட்டு புதிய அதிகாரப்பகிர்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கின்றனர். மிகப் பெரும்பாலானவர்கள் 13ஆவது திருத்தம் பற்றிய எந்த அறிவும் இல்லாமலேதான் – பரவலாக எழுப்பப்படும் கோஷங்களை அடிப்படையாக வைத்துத்தான் 13ஆவது திருத்தம் மீதான அதிருப்தியைக் காட்டுகின்றனர். நேற்றைய மகாநாயக்க தேரர்மாரின் எதிர்ப்பும் அப்படியானதாகவே இருப்பதாக தெரிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த சில வாரங்களாகவே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு மற்றும் 13ஆவது திருத்த அமுலாக்கம் குறித்து பகிரங்கமாகவே பேசிவந்தார். இந்திய வெளிநாட்டமைச்சர் ஜெய்சங்கர் அண்மையில் வந்தபோதுகூட 13ஆவது திருத்த அமுலாக்கம் குறித்து வலியுறுத்தியிருந்தார்.

மகாநாயக்கமாரின் நேற்றைய கடிதத்தை இலேசான விடயமாக கருதிவிட விடமுடியாது. 13இற்கெதிரான சிங்கள தேசியவாதிகளின் எதிர்ப்புக்குரலை பதிவுசெய்துள்ள தேரர்களின் கருத்தை இலகுவில் ரணிலால் தட்டிக்கழித்துவிட முடியாது.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று, அதலபாதாளத்தில் இருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிகளை செய்து அந்த கடனை பெறுவதற்கான நிலைமை கைகூடி வருவதற்கான அடிப்படை உதவியாளரே இந்தியாதான். அப்படி பெரும் உதவியை செய்த இந்தியா கூறும் அல்லது இந்தியாவால் முன்வைக்கப்பட்ட 13ஆவது திருத்த அமுலாக்க ஆலோசனைகளை இலங்கையின் பௌத்த உயர்பீடம் கடாசியிருப்பது சிங்கள பேரினவாதம் இன்னமும் திருந்தவில்லை என்பதையே சுட்டிநிற்கின்றது.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுலாக்கி மாகாண சபை முறைமையை வலுப்படுத்தினால்தான் பொருளாதார ரீதியான இலக்குகளை அடைய உதவிகளை செய்வோம் அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற ஒத்துழைப்போம் என்று இந்தியா கூறியிருந்தால், முன் நிபந்தனை விதித்திருந்தால் இலங்கையின் நிலைமை என்ன? ஓரிரு மாதங்கள் வரை வரிசையில் நின்று, பொருட்கள் தட்டுப்பாட்டை எதிர்நோக்கிய இலங்கை, இன்று சற்று தலையை நிமிர ஆரம்பிக்கும்போதே மீண்டும் தனது குரூர முகத்தைக் காண்பிக்கத் தொடங்கியிருக்கிறது.

மாகாணசபை வலுப்படுத்தல் என்ற ரணிலின் அறிவிப்போ அல்லது 13ஆவது திருத்த அமுலாக்கலுக்கு மகாநாயக்கர்களின் எதிர்ப்போ தமிழர்களுக்கு புதுமையை தந்துவிடவில்லை. இந்த எதிர்ப்புக்கு இதுவரை ஏற்பட்ட தாமதம்தான் அவர்களுக்கு வியப்பை தருகிறது. சிங்களத் தீவில் தமிழர்கள் வெறும் அடிமைகள் என்ற மனநிலை தொடர்வதை காலாகாலம் உணரும் தமிழர்கள் இதை அதில் ஒன்றாகவே உணர்கின்றனர். ஏனெனில், சிங்கள ஆட்சியாளர்களும் அவர்களை வழிநடத்தும் தேரர்மாரும் திருந்தப்போவதில்லை என்பதை தமிழர்கள் வரலாற்றுப் பட்டறிவுகளால் நன்கு உணர்ந்தும் உள்ளனர்.

மகாநாயக்க தேரர்களின் இந்த அறிவிப்பு கூட அரசியல் ரீதியாக ரணிலுக்கு நன்மையே. அவர்களின் கோரிக்கையை ஏற்று 13ஆவது திருத்தத்தை தொடர்ந்தும் கிடப்பில் போட்டால் தென்னிலங்கைக்கு ஏற்ப நல்லதொரு அரசியல் தலைவராக உருவெடுப்பார் ரணில்.

ஆனால், அதுவல்ல விடயம். இந்த தேசம் என்றைக்கும் உருப்படப்போவதில்லை என்ற கனமான செய்தி இப்போது மீண்டும் ஒருமுறை தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மகாவம்ச மனநிலை, இவர்கள் என்றும் திருந்த இடமளியாது என்பதை அழுத்தம் திருத்தமாக கூறிவைக்க விரும்புகிறோம்.

# வவுனியா பொருளாதார மத்திய நிலையமும்




# மக்கள் நலன்சாரா அரசியல்வாதிகளும்!



**சிவகுமார் திவியா**

வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம், தோட்டம், கால்நடை வளர்ப்பு என்பவற்றை பிரதான தொழிலாக செய்து வருகின்றார்கள். எனினும், இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சரியான சந்தை வாய்ப்பு இல்லை. அத்துடன், நியாய விலைக்கு உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாத நிலைமை இருக்கின்றது. வியர்வை சிந்தி கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் அதனை விற்பனை செய்யும் போது இடைத்தரகர்கள் அதற்குரிய விலையை வழங்குவதில்லை. இது காலகாலமாக நடந்து வருகின்றது. உண்மையில் உற்பத்தி செய்யப்படும் ஒரு பொருளுக்கு குறிப்பிட்ட நிர்ணய விலை இருக்க வேண்டும்.

குறிப்பாக நெல்லை எடுத்துக்கொண்டால் அரசாங்கம் நிர்ணய விலையை தீர்மானித்தாலும் கூட இலங்கையில் அரிசி ஆலைகள் வைத்திருப்பவர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையை மாற்றியமைக்கும் சக்தியாக இருக்கின்றனர். இருந்தாலும், தற்போது இடைத்தரகர்கள் அவ்விலையை மாற்றியமைக்கிறார்கள். இதனால் கஷ்டப்பட்டு வியர்வை சிந்தி உழைப்பவர்களுக்கு உரிய விலையில் விற்பனை செய்வதற்கு பல்வேறுபட்ட பிரச்சனைகள் உள்ளன. இதற்கு நிரந்தரமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதுதான் மக்களுடைய நீண்டகால பிரச்சினையாக இருக்கின்றது.

வவுனியாவில் விவாதப் பொருளாகி, இழுபறிப்பட்டு, பிரச்சினைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியில் 291 மில்லியன் ரூபாவில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் செயற்படாத நிலையில் இன்றும் பூட்டிக் கிடக்கிறது.

விவசாய உற்பத்திப் பொருட்களான மரக்கறி மற்றும் பழங்களுக்கான மொத்த விற்பனை சந்தை ஒன்றை உருவாக்கி அவற்றை சேகரிக்கும் மத்திய நிறுவனமாக அதை செயற்படுவதற்கும், மரக்கறிகள், பழங்கள், காய்கறிகளை சுத்திகரித்து வழங்குவதுடன், சில்லறை மற்றும் மொத்த கொள்வனவுகளை நோக்கமாகக் கொண்டும் ஒவ்வொரு பிரதேசத்திலும் விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் உருவாக்கப்படுகின்றன. அவை மாத்திரமல்லாது, பொருளாதார மத்திய நிலையம் அமைந்துள்ள பிரதேசங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், அப்பிரதேசத்திலுள்ள காய்கறி உற்பத்தியாளர்களுக்கும், கொள்வனவாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் பொருளாதார மத்திய நிலையமானது ஒரு வரப்பிரசாதமாகவும் அமைந்துள்ளது. "சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடுவந்து சேராது" என்று சொல்வார்கள்.

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தைப் பொறுத்தவரையில் இது மிகவும் பொருத்தமான பழமொழியாகவே காணப்படுகின்றது.

கடந்த 2016ஆம் ஆண்டு கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வவுனியா மதகு வைத்தகுளத்தில் 291மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையமானது மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படாத நிலையில் பற்றைக்காடுகளாகவும் பறவைகளின் சரணாலயமாக பூட்டி வைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் 2015ஆம் ஆண்டு விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட வேண்டும் என ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து பிரச்சினைகளும் சிறகு விரிக்க ஆரம்பித்திருந்தன. அன்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்த வைத்தியர் ப.சத்தியலிங்கம் தலைமையிலான குழுவினர் வவுனியா நகரத்திலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தாண்டிக்குளத்தில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க வேண்டும் என்றும் முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் ஒரு குழுவினர் விசேட பொருளாதார மையத்தை ஓமந்தையில் அமைக்க வேண்டும் என்றும் தெரிவித்த நிலையில், பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதில் இழுபறி ஏற்பட்டது.

இந்த பொருளாதார மத்திய நிலைய விவகாரமானது அரசியல்வாதிகளின் அரசியல் செய்யும் மத்திய நிலையமாக மாற்றப்பட்டு ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும், சாகும்வரை உண்ணாவிரதங்கள் என பெரும் போராட்டக்களமாக வவுனியா மாறியிருந்தது.

தாண்டிக்குளமா அல்லது ஓமந்தையா என்ற இழுபறி நிலைமை கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பி.ஹரிசனால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அப்போதைய கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பி.ஹரிசன் வவுனியா மதகு வைத்தகுளத்தில் விசேட பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படும் என தெரிவித்ததுடன், 2016ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி பொருளாதார மத்திய நிலையத்தின் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து வைத்தார். அரசியல் இலாப நோக்கத்துடனும், நீயா - நானா என்ற இழுபறியுடன் தமிழ் அரசியல்வாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் 'குரங்கு அப்பம் பங்கிட்ட' கதையாக மதகு வைத்தகுளத்தில் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த ஏழு வருடங்களாக எவரும் உள்ளே அனுமதிக்கப்படாமல் மூடிய நிலையில் காணப்படுகின்றது.

ஒரு பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு மாவட்ட அரசாங்க அதிபர் தலைவராகவும், பிரதேச செயலாளர், செயலாளராகவும் பதவி வகிப்பார்கள். அந்தவகையில் வவுனியாவில் கடந்த ஏழு வருடங்களாக பணியாற்றிய பல அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் என்ன செய்தார்கள் என்ற கேள்வி எழுகிறது. அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் சொல்லுக்கும் கட்டுப்பட்டு மத்திய நிலையத்தை கைவிட்டார்களா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் பலமாக எழுந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரையில் விவசாயத்தை பெருமளவில் வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். வவுனியா நகரப்பகுதியில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதை விட ஓமந்தை போன்ற பகுதியில் பொருளாதார மத்திய நிலையம் அமையப்பெற்றால் விவசாயிகளுக்கு அது வரப்பிரசாதமாக அமையும் என்பது உண்மைதான். காரணம் பெருமளவிலான விவசாயிகள் ஓமந்தையை அண்டிய பகுதியில் விவசாயம் செய்து வருவதுடன், வன்னி பெரு நிலப்பரப்பை ஓமந்தைப் பகுதி இணைக்கவும் செய்கிறது.

ஏ9 வீதியூடாக போக்குவரத்தும் இலகுவாக இருக்கும் என்பதுடன், போக்குவரத்து நெரிசல் ஏற்படாது வாகன தரிப்பிட வசதிகளையும் தேவையான அளவு ஏற்படுத்தவும் முடியும். யுத்தகாலத்தின் பின்னர் வடக்கு மற்றும் வன்னி பகுதிக்கு படையெடுத்த அரசியல்வாதிகள் அல்லது அதன் பின்னர் வடக்கு மக்களால் தேந்தெடுக்கப்பட்ட முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.விக்கினேஸ்வரன் போன்றோர் மக்களின் எண்ணங்கள் மற்றும் வன்னி நிலப்பரப்பின் தன்மைகள் பற்றிய அறிவு அற்றவர்களாகவே காணப்பட்டார்கள்.

(05 ஆம் பக்கம்)

## நக்கல் நமசிவாயம்

**நெல்சன் மண்டேலாவுடன் தன்னை ஒப்பிட்டுப் போட்டார் மைத்ரி... மண்டேலாவை இதைவிட மோசமா ஆரும் கேவலப்படுத்தியிருக்க மாட்டாங்கள்..!**



## இன்றைய நாளில்..

- **1894 – யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டது.**
- **1930 – பிரித்தானிய ஹொங்கொங்கின் கவுலூனில் இடம்பெற்ற மாநாட்டில் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.**
- **1943 – டோர்செசுடர் என்ற அமெரிக்கக் கப்பல் ஜேர்மனியின் நீர்மூழ்கியினால் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டதில், 902 பேரில் 230 பேர் மட்டுமே உயிர் தப்பினர்.**
- **1945 – இரண்டாம் உலகப் போரின்போது ஐக்கிய அமெரிக்காவின் 1,000 விமானங்கள் பேர்லின் மீது குண்டுகளை வீசின. இதன்போது 2,500 முதல் 3,000 வரையானோர் கொல்லப்பட்டனர்.**
- **1966 – சோவியத் விண்கலமான லூனா-9 சந்திரனில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் என்ற பெருமையைப் பெற்றது.**
- **1969 – யாசர் அரபாத் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரானார்.**
- **1972 – ஈரானைப் பெரும் பனிப்புயல் தாக்கியது. அடுத்த ஏழு நாட்களில் 4,000 பேர் வரை உயிரிழந்தனர்.**
- **1984 – அமெரிக்க வரலாற்றில் முதல் தடவையாக ஒரு பெண்ணிலிருந்து மற்றொருவருக்கு கருமாற்றம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.**
- **1984 – செலஞ்சர் விண்ணோடத்தில் சென்ற விண்வெளி வீரர்கள் புரூஸ் மக்காண்ட்லெஸ், ரொபர்ட் ஸ்டுவேர்ட் ஆகியோர் முதன்முதலாக விண்வெளியில் சுயாதீனமான நிலையில் நடந்து சாதனை படைத்தார்கள்.**
- **1989 – பராகுவேயில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியையடுத்து 1954 இலிருந்து ஆட்சியிலிருந்த சர்வாதிகாரி அல்பிரெடோ ஸ்ட்ரோயெசுனர் பதவியிழந்தார்.**
- **1998 - தம்பலகாமம் கிராமத்தில் ஊர்க்காவல் படையினரின் சுற்றிவளைப் பின்போது சிறுவர்கள் உட்பட எட்டு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.**
- **2006 – அல்-சலாம் 98 என்ற எகிப்திய பயணிகள் கப்பலொன்று செங்கடலில் 1,721 பேருடன் மூழ்கியதில் 435 பேர் மட்டும் மீட்கப்பட்டனர்.**

# நெற்கதிரில் ஏற்பட்டுள்ள மஞ்சள் நிறமாதல் பிரச்சினை குறித்து ஆராய ஐந்து குழுக்கள்

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா

நெற்கதிரில் தண்டு மஞ்சள் நிறமாதல் உள்ளிட்ட நோய்களினால் நெற்பயிர்ச் செய்கைக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில் ஆராய விவசாய மற்றும் விவசாய காப்புறுதிச் சபையின் ஐந்து குழுக்கள் மொனராகலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்முறை நெற்செய்கையில் பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறியமை உள்ளிட்ட நோய்கள் தொடர்பில் விவசாயம் மற்றும் கமநல காப்புறுதி சபையில் விவசாயிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர் நெற்பயிர்ச் செய்கைக்கு 40 ஆயிரம் ரூபா வீதம் ஒரு ஹெக்டேயருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க விவசாயம் மற்றும் விவசாயிகள் காப்புறுதிச் சபை ஏற்பாடு செய்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக விவசாயிகள் காப்பீடு செய்வது கட்டாயமில்லை என்றும், அதற்கான தொகையை அரசே செலுத்தும் என்றும் அமைச்சகம் கூறுகிறது.

ஆனால், விவசாயக் காப்புறுதிச் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய காப்புறுதி முறையின் கீழ், ஒரு ஹெக்டேயருக்கு 6ஆயிரத்து 400 ரூபா தவணையில் செலுத்தி காப்புறுதியைப் பெற்றால், கூடுதலாக 60 ஆயிரம் ரூபா காப்புறுதியின் கீழ் ஒரு இலட்ச ரூபாவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒரு ஏக்கர் பயிர் சேதத்திற்கு அரசாங்கம் வழங்கிய 40ஆயிரம் ரூபாவுக்கு, ஒரு ஹெக்டேயருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா காப்புறுதி இழப்பீடு பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நினைவு முத்திரை - நாணயம் ஜனாதிபதியிடம் கையளிப்பு







75ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை தபால் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள நினைவு முத்திரை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள விசேட நினைவு நாணயம் என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று (02) முற்பகல் கண்டி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

நினைவு முத்திரையை வெகுசன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவும் நினைவு நாணயத்தை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளித்தனர்.

தபால் திணைக்களத்தின் பாரம்பரிய நடவடிக்கைகளுக்கு அமைவாக 50 ரூபா பெறுமதியுடன் வெளியிடப்பட்டுள்ள இந்த நினைவு முத்திரை மற்றும் அதன் முதல் நாள் கடித உறை என்பன நேற்று முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தபால் நிலையங்களிலும் உப தபால் நிலையங்களிலும் விற்பனை செய்யப்படும்.

அத்துடன் கண்டி, திருகோணமலை, குருநாகல், காலி மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள விசேட முத்திரை கருமபீடங்கள் ஊடாக இந்த நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் கடித உறையை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை இலங்கை முத்திரைப் பணியகம் மேற்கொண்டுள்ளது.

75ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை தபால் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முத்திரை கண்காட்சி மற்றும் அருங்காட்சியக கண்காட்சி என்பன பெப்ரவரி 6ஆம் திகதிமுதல் 12ஆம் திகதிவரை காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை கொழும்பு 10 டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள தபால் தலைமையக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள 1000 ரூபா பெறுமதியுள்ள நினைவு நாணயம் புழக்கத்திற்கு விடப்பட மாட்டாது என்பதோடு, இது இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 71ஆவது நினைவு நாணயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறைக் கைதிகள் இருவர் தப்பியோட்டம்

மொரவக்க நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்துச்செல்லப்பட்ட இரு கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் (01) சிறைச்சாலை அதிகாரிகளின் பிடியில் இருந்து தப்பிச்சென்றதாக மேலதிக சிறைச்சாலை ஆணையாளரும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

தப்பிச்சென்ற கைதிகளை கைதுசெய்வதற்கான விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



2022ஆம் ஆண்டுக்கான The Booker Prize வென்ற சிஹான் கருணாதிலக்கவின் The Seven Moons Of Malli Almeda எனும் நூலில் சிறப்பு பிரதியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவுக்கு நிறுவனத்தின் ஆலோசனை சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் அவரது காரியாலயத்தில் வைத்து வழங்குவதை படத்தில் காணலாம்.

# தெமோதரையில் புதையல் தோண்டிய 6 பேர் கைது

(கெலும் குணதிலக்க)

கோனகங்கர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் யால பூங்காவிற்குட்பட்ட தெமோதர – தெமோதரமுல்ல பிரதேசத்தில் புதையல் தோண்டிய 6 பேர் நேற்று முன்தினம் (01) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புதையல் தோண்டுவதற்கு முன்னர் பூஜை செய்வதற்காக கொண்டுவரப்பட்ட யாகப் பொருட்கள் மற்றும் அகழ்வுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்களில் இருவர் ஊவா பரணகம - அம்பகஸ்தோவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், மற்றைய நான்கு சந்தேகநபர்கள் பொல்பிதிகம - மாஎலிய, அக்குரஸ்ஸ, குருநாகல் - ரிதிகம, அம்பன்பொல - அம்பகொலவெவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

சந்தேகநபர்கள் 20-33 வயதுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கெலும் குணதிலக்க)

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வண்டிகும்புர பகுதியில் 6 கிலோ 685 கிராம் உலர் கஞ்சாவை எடுத்துச்சென்ற இளைஞர் ஒருவர் மொனராகலை பொலிஸாரால் நேற்று முன்தினம் (01) செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கொட்டியாகலை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும், அவர் வெண்டிகும்புர பிரதேசத்திற்கு பாதயாத்திரையாக நடந்து வந்து கொண்டிருந்தபோது, ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இவரை விசாரித்ததில் அவரிடமிருந்து உலர் கஞ்சா அடங்கிய பொதியை கண்டெடுத்துள்ளனர். மீட்கப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 3 இலட்சத்து 50ஆயிரம் ரூபாவாகும்.

சந்தேக நபர் மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

# வவுனியா பொருளாதார

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா விசேட பொருளாதார மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அதற்கான விலை கோரல் மனுக்கள் அரசினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்த விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் அதிர்ந்தே போனார்கள்.

குறிப்பாக கண்டி மற்றும் தம்புள்ள போன்ற பொருளாதார மத்திய நிலையங்களில் ஒரு கடைக்கு 5 ஆயிரம் ரூபா அறவிடும் அரசு, வவுனியாவில் 50 ஆயிரம் ரூபா வாடகை கோரியிருந்தது. வவுனியா ஹொரவப்பொத்தான வீதியில் அமைந்துள்ள விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் சிறு வியாபாரிகளின் சந்தையானது அவ்வியாபாரிகளுக்கு ஏற்ற விதத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

பொருளாதார மத்திய நிலையம் அமையப் பெற்றால் விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் நன்மையாக அமையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அரசின் அறிவிப்பு விவசாயிகளை சோர்வடைய செய்ததுடன், பொருளாதார மத்திய நிலையம் தொடர்பான ஆர்வத்தை விவசாயிகளிடம் குறைத்திருந்தது.

அரசின் இச்செயற்பாடானது பொருளாதார மத்திய நிலையத்தை தென்னிலங்கை மொத்த வியாபாரிகளுக்கு தாரைவார்க்கும் ஒரு செயற்பாடாகவே பார்க்க முடிவதாக வவுனியா விளைபொருள் உற்பத்தி விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கவலை வெளியிட்டிருந்தனர்.

வவனியா விசேட பொருளாதார மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டு ஏழு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில், அக்கட்டடத்தின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டு வருவதாகவும், மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் பிரச்சினைகள் முற்றாக நிறைவு செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது.

வவுனியாவில் 291 மில்லியன் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையம் தொடர்பாக அனைவரும் மௌனம் சாதித்து வருவதால் மக்கள் வரிப்பணம் வீணடிக்கப்படுவதுடன், பொருளாதார மத்திய நிலையத்தினூடாக பிரதேசத்திற்கு வரவேண்டிய வருமானங்களும், தொழில் வாய்ப்புகளும் இல்லாது போயுள்ளன. உண்மையில் அவ்வாறு அமைக்கப்பட்டது சிறப்பானதும் கூட. தற்போது தம்புள்ளை பகுதியில் உள்ள பொருளாதார மத்திய நிலையம் போன்று வவுனியாவில் அமைக்கப்படும் போது அதன் மூலம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள், உற்பத்தியாளர்கள் நன்மைகளைப் பெறக் கூடியதாக இருக்கும்.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் இடைத்தரகர்கள் இன்றி தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தக் கூடிய ஒரு திறந்தவெளி உருவாக்கப்படும் அதேவேளை, பலருக்கு வேலை வாய்ப்புகளும் ஏற்பட இடமுண்டு. வீதியோர வியாபாரம் கட்டுப்படுத்தப்படும் விபத்துகள் தடுக்கப்படும் . இவ்வாறான நிலையில் இப்பொருளாதார மத்திய நிலையத்தை எக்காலத்தில்? யார்? திறந்துவைத்து? என்பது தொடர்பில் இழுபறிநிலை தற்போது வரை தொடர்கிறது குறித்த பொருளாதார மத்திய நிலையமானது பொருத்தப்பாடான இடத்தில் அமைக்கப்பட்டுள்ளதா? உண்மையிலேயே பொருளாதார மத்திய நிலையத்தின் கட்டடம் மக்கள் பாவனைக்கு உகந்த நிலையில் உள்ளதா? கட்டப்பட்ட கட்டடம் 291 மில்லியன் ரூபா பெறுமதியானதா? என்ற கேள்விகளும் எழுகின்றன. மக்களின் நலன்சாராது அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் தன்னிச்சையாக எடுக்கும் முடிவுகள் நீரற்ற கிணறு போலவும் பூவற்ற செடி போலவுமே எவருக்கும் பயனற்றதாக அமைந்து விடும் என்பதற்கு வவுனியா பொருளாதார மத்திய நிலையம் ஒரு உதாரணம்.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திரவிடம் வினவியபோது அவர் கூறியதாவது,

வவுனியா பொருளாதார மத்திய நிலையம் விரைவில் மக்கள் பாவனைக்காகத் திறக்கப்படும் என்று வழமையாக பதவியில் இருந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் சொன்னதுபோல்



ஒரேபதிலை கூறுகின்றார். கட்டப்பட்டுள்ள பொருளாதார மையத்திலே 50 கடைகள் உள்ளன இதனை பங்கீட்டு கொடுப்பது எப்படி என்று அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 35 கடைகள் உள்ளூர் விலைபொருள் விற்பனையாளர் சங்க விவசாயிகள் மொத்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கவேண்டுமெனவும் அடுத்ததாக விவசாய நடவடிக்கைக்காக விவசாய அமைப்புக்களுக்கு 10 கடைகள் வழங்க வேண்டுமெனவும் . மிகுதியாகவுள்ள கடைகளை திறந்த கேள்வி கோரல் மூலம் ஏனையவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது. எந்த இடம் மாற்றத்தின் காரணமாக ஏற்படும் வெற்றிடம் இப்போதைக்கு மொத்த வியாபாரம் செய்த இடம் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்படும் இவ் அதிகாரிகளுடன் வேலை திட்டங்களை செய்வது எப்படி என்று அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்த இரண்டு காரணம் தொடர்பான தீர்மானத்தின்படி தற்போது வேலை திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி இப்போதைக்கு தேர்ந்தெடுத்த வேலை திட்டங்களுக்கான இந்த இரண்டு பிரச்சினைகளும் தீர்ந்து விட்டன. ஆனால், இப்போதைக்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள மையத்தை திறப்பதற்கான சில புதிய பிரச்சினைகள் அதாவது நீர், மின்சாரம், சிறு சிறு புனரமைப்புகள் தொடர்பான வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. விவசாய அமைச்சிடம் நாங்கள் மூன்று மில்லியன் ரூபா பணத்தை பொருளாதார மத்திய நிலையம் சம்பந்தமான முக்கிய தேவைகளை சீர்செய்வதற்காக கேட்டுள்ளோம். இந்தப் பணம் கிடைத்தவுடன் இந்த வேலைத் திட்டங்களை முடிவு செய்து மிக விரைவில் வர்த்தக நடவடிக்கைக்காக புதிய பொருளாதார மையம் திறந்து வைக்க முடியும் என நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

**சிவகுமார் திவியா**
**வவுனியா**

## 02.02.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 144 56 4 | 155 8761 |
| கனேடியன் டொலர் | 167 4153 | 170 0333 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 6865 | 44 7881 |
| யூரோ | 283 7 61 | 30 3063 |
| ஜப்பான் யென் | 1 6757 | 1 786 |
| சிங்கப்பூர் டொலர் | 163 5386 | 174 7764 |
| ஸ்ரேலிங் பவுன் | 333 0461 | 350 431 |
| சுவிஸ் பிரான்ங் | 282 6450 | 301 22 4 |
| ஐ.அ.டொலர் | 25 30 0 | 260 220 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 85 4088 |
| குவைட் | குவைட் தினார் | 0,077 2852 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 4634 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 2142 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4 27 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 4814 |

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.02.01
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5018
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,861,989.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 7 5 1 1 4 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3260
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,953,872.40
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 11 15 63 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1473
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 8 9 0 1 2 8

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1048
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,294,600.80
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 16 44 70 74

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 327
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,698,170.00
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 02 38 47 53
விசேட இலக்கினம் மிதுனம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1366
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 297,239,762.00
ஆங்கில எழுத்து G
சுப்பர் இலக்கம் 12
வெற்றி இலக்கங்கள் 19 28 39 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் நடைபெறும் ஏலவிற்பனை

**செலான் வங்கி (பீ.எல்.சி.) - கம்பளை கிளை**
**பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை**

கம்பளையை வதிவிடமாகக்கொண்ட ஹெட்டி முதலிகே அனுர பிரியஷாந்த் அல்லது அனுர பிரியஷாந்த் ஹெடிட்டி முதலிகே என்பவர் "கடப்பாட்டாளராகவும் / ஈடுவைத்தவராகவும்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார். அதனால் பிரசித்த நொத்தாரிசு நில்னி சீ வேகொடபொல என்பவரினால்.அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.02.08ஆம் திகதி 745ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஏ.மெலனி டி விமா என்பவரினால் அனைத்தும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.10.24ஆம் திகதி 1149 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2017.05.18ஆம் திகதி 1580ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2018.05.21ஆம். திகதி 1752ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மூலம் செலான் வங்கியில் அடகுவைக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது.

**2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு செலான் வங்கி பீ.எல்.சி.யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குற்பட்டு செலான் வங்கி பீ.எல்.சி. இல. 90, காலி வீதி, கொழும்பு 03இல் உள்ள கிளை வளாகத்தில் என் மூலமாக கிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்**

இந்த ஏலவிற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கோவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதலுக்கேற்ப நடத்தப்படும்.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில், கங்கா பஹல கோரலே, கம்பொல நகர சபை எல்லைக்குள், உடபலாத்த பிரதேச செயலக அலுவலக பிரிவிற்குள் 1365ஆம் இலக்க பொல்கும்புர கிராம சேவகர் பிரிவிற்குள், வோட் இலக்கம் 5இல் கம்பொல பஸார் இல் உள்ள நில அளவையாளர் டி.எம்.பி.பீ. ரம்புக்வெல்ல என்பவரினால் வரையப்பட்ட 2003.07.13ஆம் திகதியிடப்பட்ட 1192ஆம் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லொட் ஏ என குறிப்பிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித் துண்டின் அளவு இரண்டு தசம் ஒன்று இரண்டு பேர்ச்சஸ் (ஏ.0-றூ.0-பே.2.12) விசாலமான ஈட்டு முறி இலக்கம் 40ஐ உடைய கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் மேலும் பொது வீதிகளையும் கொண்ட காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி:-** கம்பொல நகரத்தில் இருந்து (பிரதான சுற்றுவட்டம்) நுவரெலிய வீதி ஊடாக 50 மீற்றர் வரை சென்ற பிறகு இந்த சொத்து வலது புறத்தில் அமைந்துள்ளது. (ஈட்டு முறி இலக்க 40, நுவரெலிய வீதி)

**தீர்மான முடிவு அறிவித்தல்கள்:-** 2020.06.17ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியிலும் 2022.06.22ஆம் திகதி டெய்லி FT, அத மற்றும் தமிழன் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்:-** உத்தேச கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10%
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,500/-
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகாரசபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு, ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சி. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏலவிற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும். பிரதான முகாமையாளர். (சட்டம்), செலான் வங்கி பீ.எல்.சி. இலக்கம் 90, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி இலக்கங்கள்: 011-2456465, 011-2456473

எதுவித முன்னறிவித்தலும் இன்றி மேற்படி ஏலவிற்பனையை நடத்துவதற்கும் / இரத்துச் செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

**சந்திமா பிரியதர்ஷனீ கமகே,**
**நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.**

**இல. 9-i, ஹைலெவல் வீதி,**
**சர்வோதய மாவத்த, பனாகொட, ஹோமாகம.**
**தொலைபேசி இலக்கம்: 0714318252**

# நாடு ஏழ்மையில் இருக்க ஆட்சியாளர்கள் செல்வச் செழிப்புடன் சுகபோகங்களை அனுபவிக்கிறார்கள்

## இவ்வாறான அரசியல் கலாசாரத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்கிறார் அநுரகுமார திசாநாயக்க





(எம்.ஜே.எம்.வலீத்)

உலகிலுள்ள மற்றைய நாடுகளில், நாடு ஏழ்மையில் இருந்தால் அரசியல்வாதிகளும் ஏழ்மையில் இருக்கிறார்கள், நாடு முன்னேறினால் அரசியல்வாதிகளும் செல்வச் செழிப்பாக இருக்கிறார்கள். ஆனால், இலங்கையில், நாடு ஏழ்மையில் இருக்க ஆட்சியாளர்கள் செல்வச் செழிப்பாக சுகபோகம் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நாசகார அரசியல் கலாசாரத்தை இல்லாதொழிக்க வேண்டும் - என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அட்டாளைச்சேனை, ஒலுவில் பிரதேசத்தில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களான எம்.எஸ்.சத்தார் (ஆசிரியர்) மற்றும் ஏ.எம்.றினோஸ் ஆகியோரை ஆதரித்து ஒலுவில் வெளிச்சவீட்டு வீதியில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அஷ்ஷேய்க் எஸ்.றிசான் (நளீமி) தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இப்பிரதேசத்தில் எமது தேசிய மக்கள் சக்தியின் அரசியல் பிரவேசம் என்பது முதற்தடவையாகும். இங்கு அரசியலை தெரிவுசெய்ய இரண்டு காரணங்கள் உள்ளன. நாட்டை அழிவின் பாதையிலிருந்து மீட்பது, இந்நாட்டைக் கட்டியெழுப்பும் பிரச்சினைகளைத் தீர்க்கும் பாதையை புதிய தலைமுறையினருக்கு வழிப்படுத்துவது. இன்று முழு நாட்டு மக்களும் ஒரு புதிய மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். எமது ஆட்சியாளர்களால் நாடு வீழ்ச்சியடைந்துள்ளது. பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

தொழில் இன்மை, மருந்து வகைகளுக்கு பற்றாக்குறை, வருமானத்திற்கான வழியின்மை, மின்சாரக் கட்டணம் அதிகரிப்பு, வரி அதிகரிப்பு என பல்வேறு வழிகளில் எமது நாட்டின் அனைத்து துறைகளையும் சீரழித்துள்ளனர். இந்த அம்பாறை மாவட்டம் இரண்டு போகங்கள் உற்பத்தியை வழங்கக்கூடிய விவசாய பூமி. கடல் வளங்களை அதிகம்கொண்ட, சிறந்த காலநிலையைக்கொண்ட பிரதேசமாகும். இவ்வாறான வளங்களைக்கொண்ட இந்நாடு இவ்வளவு நாசமானது ஏன்? இதற்கெல்லாம் காரணம், இந்நாட்டின் சொத்துகளை சூறையாடி சுகபோகம் அனுபவித்துக்கொண்டிருக்கும் மோசமான எமது ஆட்சியாளர்கள்தான். கோட்டாபய ஜனாதிபதியாக ஆகும்வரை கொத்து சாப்பிட்டால் அதற்குள் கருச்சிதைவு மாத்திரை என்றும் வைத்தியர் ஷாபியை வீண் பழிபோட்டு கைதுசெய்தும் முஸ்லிம் - சிங்கள மக்களிடையே இனவாதத்தை வளர்த்தார்கள். கோட்டாபய அரியாசனத்தில் அமரும் வரைதான் இந்தக் கதை இருந்தது. கோட்டாவைத் தோற்கடிக்க நீங்கள் வாக்களித்த உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க்கட்சியில் அமர்ந்துகொண்டு அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கிறார்கள். எமக்கான ஒரு சிறந்த எதிர்காலத்திற்காக நாம் ஒன்றுபட வேண்டியதும் உங்களுக்காக திசைகாட்டியை வெற்றிபெறச் செய்வதும் காலத்தின் கட்டாய கடமையாகும்.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த, இலங்கை ஆசிரியர் சங்க கிழக்கு மாகாண செயலாளர் அநுர ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி முதன்முறையாக தனித்துப் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை செய்தியாளர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போயொர் வீதி, ஒலுவில் பிரதேசத்தில் 2000 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி, பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.சதாத், பொலிஸ் பரிசோதகர் பகிதரன் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன், அவரிடமிருந்து 2000 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் நேற்று (02) வியாழக்கிழமை ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட கைதி நீதிமன்ற மதில் மீதேறி தப்பியோட்டம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நீதிமன்றத்திலிருந்து கைதி ஒருவர் நீதிமன்ற சுவரை விட்டு பாய்ந்து தப்பியோடிய சம்பவம் நேற்று வியாழக்கிழமை (02) பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பிரதேசத்தில் கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் ஒருவரை கைதுசெய்த பொலிஸார், அவரை சம்பவதினமான நேற்று பகல் 12 மணியளவில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

நீதவான் அறையில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த கைதுசெய்யப்பட்ட கைதியின் விலங்கை பொலிஸார் கழற்றியபோது குறித்த நபர் அங்கிருந்து ஓடி நீதிமன்ற மதில் மீது ஏறி தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து, தப்பியோடிய நபரை தேடிவருவதுடன் அவரை கைதுசெய்வதற்கான மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருகோணமலையில் சீரற்ற காலநிலை: 46 குடும்பங்களைச் சேர்ந்த 147 பேர் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிப்பு





(அப்துல்சலாம் யாசீம்)

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 147 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட பணியகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் பெய்த காற்றுடன் கூடிய மழை காரணமாக குச்சவெளி பிரதேசத்தில் ஏழு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், கடையொன்றும் சேதமடைந்துள்ளதாக குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன் தெரிவித்தார்.

இதேவேளை, நெல் அறுவடை காலமாக இருப்பதால் நெற்கதிர்கள் வெள்ள நீரில் மூழ்கிய நிலையில் காணப்படுவதாகவும் விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். திருகோணமலை மாவட்டத்தில் கடலை அண்மித்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் காற்றுடன் கூடிய மழை காரணமாக வெள்ள நீர் புகுந்துள்ளது.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் உட்பட ஏழு பிரதேச செயலகப் பிரிவுகளில் அனர்த்தம் தொடர்பில் பதிவாகியுள்ளதாகவும், மாவட்டத்தில் 42 வீடுகளும், நான்கு கடைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் விபரங்கள் கிராம உத்தியோகத்தர்களின் ஊடாக திரட்டப்பட்டு வருவதுடன், மாவட்ட அரசாங்க அதிபரின் ஊடாக அடுத்த வாரம் இதற்கான கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

# திறந்திருந்த நகைக்கடையில் தங்க ஆபரணம் உள்ளிட்ட 6 இலட்ச ரூபா பணம் திருட்டு

## 25 வயது இளைஞன் கைது; வாழைச்சேனையில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

வாழைச்சேனை பிரதான வீதியில் திறந்திருந்த நகைக்கடை ஒன்றிலிருந்து தங்க ஆபரணங்கள், பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி உட்பட 6 இலட்சத்து 49 ஆயிரம் ரூபா பெறுமதியானவைகளை பட்டப்பகலில் திருடிச்சென்ற 25 வயது இளைஞன் ஒருவரை புதன்கிழமை (01) கைதுசெய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை பிரதான வீதியிலுள்ள பிரதேச சபை மைதானத்துக்கு முன்னால் உள்ள நகைக்கடைக்கு சம்பவத்தினத்தன்று காலை 10 மணியளவில் கடையை உரிமையாளர் திறந்து பூஜை செய்து சாம்பிராணி போட்டுக் கொண்டிருந்தபோது வாடிக்கையாளர் ஒருவர் சென்று உடைந்த தங்க ஆபரணத்தை ஒட்டித்தருமாறு கோரியுள்ளார்.

இதனையடுத்து, கடை திறந்த நிலையில் அருகிலுள்ள தங்க நகை ஒட்டும் கடைக்கு வாடிக்கையாளருடன் சென்று சுமார் 10 நிமிட இடைவெளியில், இதனை வீதியில் நின்று அவதானித்துக்கொண்டிருந்த இளைஞன் கடைக்குள் புகுந்து அங்கிருந்த 24 கிராம் 350 மில்லிகிராம் தங்க ஆபரணங்களையும் 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 3 கையடக்கத் தொலைபேசிகளையும் திருடிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து கடை உரிமையாளரினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் சப் இன்ஸ்பெக்டர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் வாழைச்சேனை உசேன் வைத்தியர் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞனை அதேநாளிலே மாலை 6 மணியளவில் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞனிடமிருந்து திருடப்பட்ட தங்க ஆபரணங்கள், பணம், 2 கையடக்க தொலைபேசிகளை மீட்டுள்ள பொலிஸார், குறித்த இளைஞன் பிரதேசத்தில் நீண்டகாலமாக பல வீடுடைப்புக் கொள்ளைச் சம்பவங்களில் தொடர்புடையவர் எனவும் இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் நெல் அறுவடை!



(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சேதனப் பசளையை முற்றுமுழுதாகப் பயன்படுத்தி, மேற்கொள்ளப்பட்ட வேளாண்மை நெல் அறுவடை விழா புதன்கிழமை (01) திமிலைதீவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி போதனாசிரியர் பிரிவிலுள்ள திமிலைதீவு கிராமசேவகர் பிரிவு சிவலிங்கம் ஸ்ரீதரனுக்குச் சொந்தமான வயல் நிலத்தில் சேதனப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

சமய வழிபாடுகளுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் ச.பேரின்பராசா, தேசிய உர செயலக மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.எல்.எம்.சிராஜூன், பெரேரா பிளான்ட் மேட் உர நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சுரங்க டீ. சில்வா, மண்முனை வடக்கு கிராம நிர்வாக உத்தியோகத்தர் கே.ராஜன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் கலந்துரையாடல்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (01) இடம்பெற்றது.

கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கிவரும் கைத்தொழில் அதிகாரசபையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 ஆயிரம் தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் தொழில்முனைவோர்களுக்கு பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன. எமது பிரதேசத்தில் புதிய தொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பான சாத்திய வளம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலம் எமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கான செயற்திட்டமாக அமைந்ததுடன், தொழில் முனைவோர்களுக்கு இலகு கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வளவாளர்களினால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

தொழில் முயற்சியாளர்களினால் நன்னீர் இறால் வளர்ப்பு மூலம் அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் வைத்தியர் சரங்க அழகப்பெரும, கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் ரத்னமாலா மற்றும் பணிப்பாளர் டிக்வேல்ல, உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், பதவிநிலை அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள், உயரதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



மூதூர் பிரதேச செயலகத்தில் நடப்பாண்டின் முதலாம் காலாண்டிற்கான உள்ளக கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் தலைமையில் இடம்பெற்றது. மூதூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஹ்ரூப், தேசிய கணக்காய்வு அத்தியட்சகர் வை.பி.நிஸார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (கந்தளாய் செய்தியாளர்)

# தந்தையைத் தாக்கி கொலைசெய்த மகன் கைது

## கந்தப்பளையில் சம்பவம்







(ஆ.ரமேஸ்)

கந்தப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எதர்செட் (பூப்பனை மேல் பிரிவு) தோட்டத்தின் இலக்கம் 26 சங்காணி லயம் என அழைக்கப்படும் தொடர்வீட்டு குடியிருப்பில் தந்தையை பொல்லால் தாக்கி, மகன் படுகொலைசெய்த சம்பவம் நேற்று முன்தினம் (01) இரவு சுமார் 08 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த படுகொலைச் சம்பவத்தில் மூன்று ஆண் பிள்ளைகளின் தந்தையான குமாரவேல் தியாகபிரகாஸ் (வயது 45) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் தனது தந்தையை தாக்கியதாக பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கிய மூத்த மகன் கந்தப்பளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் உயிரிழந்தவரின் தாய் பொலிஸாரிடம் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அயல்வீட்டார் இருவரையும் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளதாக கந்தப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த சம்பவத்தில் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்த நபர் தோட்டத் தொழிலாளியாவார். இவரின் மனைவி வெளிநாட்டில் பணிப்பெண்ணாக தொழில் செய்துவருகின்ற நிலையில், உயிரிழந்தவர் தனது மகன்களுடன் வசித்து வருகின்றார்.

உடனே சம்பவம் குறித்து கந்தப்பளை பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய அதேநேரத்தில் 1990 அம்பியூலன்ஸுக்கும் அறிவித்துள்ளனர். இந்நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்த 1990 அம்பியூலன்ஸில் வந்த தாதி ஒருவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தவரை பரிசோதித்தபோது அவர் உயிரிழந்துள்ளதாக வீட்டாருக்கு தெரிவித்துள்ளார். பின் சம்பவ இடத்திற்கு வருகை தந்த கந்தப்பளை பொலிஸார் நிலைமையை ஆராய்ந்து விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், தந்தையை தாக்கியதாக ஒப்புக்கொண்ட மூத்த மகனை கைதுசெய்துள்ளனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு நுவரெலியா மாவட்ட இரசாயன தடயவியல் பொலிஸார் நேற்று (02) காலை 11.30 மணியலவில் வருகை தந்து பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அத்துடன், சம்பவ இடத்திற்கு நேற்று (02) காலை வருகை தந்த நுவரெலியா மாவட்ட நீதவான் மரண விசாரணையை நடத்தி வாக்குமூலம் பதிவுசெய்த பின், சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

# கனிய வளத்துறையில் உச்ச பயனை அடைய அமைச்சுகள் கூட்டிணைவு

## அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட்



கனிய வளத்துறையின் உச்ச பயன்களை அடைந்து கொள்ளும் பொருட்டு சுற்றாடல் அமைச்சு மற்றும் கைத்தொழில், பெருந்தோட்டத்துறை அமைச்சு என்பன இணைந்து கூட்டு வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளன. இது தொடர்பான முக்கிய கூட்டம் அமைச்சர்களான நஸீர் அஹமட், ரமேஷ் பத்திரன ஆகியோரின் இணைத் தலைமையில் சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றது.

கனிய வளங்கள் உள்ள பிரதேசங்களை அடையாளங்காணல், கனியவளத்துறையிலான முதலீடுகளை ஊக்குவித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு கருத்துரைத்த சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்ததாவது,

கனிய வளத்துறையிலான முதலீடுகளால் உலகின் பல நாடுகள் வருமானத்தை அதிகரித்து, அந்நியச் செலாவணியை சேமிக்கின்றன. கனிய வளத் தொழில்துறையிலான பொறிமுறையை மேம்படுத்துவது அவசியம். இதற்கான காலங்கள் கனிந்துள்ளதால், இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். நாட்டின் அந்நியச் செலாவணி வருமானத்தை ஈட்டுவதில் இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனம் பிரதான பங்காற்றுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றாடல் அமைச்சின் செயலாளர், கைத்தொழில் அமைச்சின் செயலாளர், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அதிகாரிகள், புவியியல் சேவை கனிய வளப் பணியகத்தின் அதிகாரிகள் மற்றும் நிதியமைச்சை பிரதிநிதித்துவப்படுத்திய சில அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.





கொழும்பு 13. ஜெம்பட்டா வீதி அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த இரதோற்சவம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ செ.சிவநேசன் சிவாச்சாரியார் தலைமையில் திங்கட்கிழமை காலை நடைபெற்றது. சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா உள்ளிட்டோர் பூஜை நடத்துவதையும் தேர் இடம்பெறுவதையும் வழிபாட்டில் கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் - மொஹமட் நசார்)

# உக்ரேனிய கடற்படையினர் இருவர் இலங்கை கடற்பரப்பில் உயிரிழப்பு

எகிப்திலிருந்து இந்தியா நோக்கிச்சென்ற சரக்குக் கப்பலில் பணிபுரிந்து கொண்டிருந்த உக்ரேனிய கடற்படையினர் இருவர் இலங்கை கடற்பரப்பில் வைத்து உயிரிழந்ததையடுத்து காலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கப்பல் தற்போது காலி துறைமுகத்திற்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும், குறித்த இருவரும் உயிரிழந்தமை தொடர்பான விடயங்கள் காலி நீதவானிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்களை கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டுவருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அங்கு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். உயிரிழந்தவர்கள் 41 மற்றும் 53 வயதுகளையுடைய உக்ரைன் பிரஜைகளாவர்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சுகாதார உதவியாளராகக் கடமையாற்றும் பெண்ணொருவரை கட்டுநாயக்க குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் (01) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை, கலிங்க கால்வாய் பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய இந்தப் பெண் தற்போது கட்டுநாயக்க, கோவின்ன பிரதேசத்தில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து வசித்து வருவதாகவும் பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹெரோயின் தனித்தனியாக சுற்றப்பட்டு, சிறிய பொதிகளில் அழகுசாதனப் பொருட்களுடன் கைப்பையில் மறைத்து வைக்கப் பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கட்டுநாயக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தனிப்பட்ட தகவல் வழங்குனரால் வழங்கப்பட்ட இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க மல்கசந்திய பிரதேசத்தில் காரில் வந்த ஒருவருக்கு இந்த ஹெரோயின் அடங்கிய பொதியை வழங்க முற்பட்டபோதே குறித்த பெண் நேற்று முன்தினம் (01) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸ் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், குறித்த பெண்ணை கைதுசெய்து, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், நேற்று (02) மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றில் அவரை முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.




**Sales Representatives**

Company: Farms Pride PVT Ltd
*Email: hrm@crysbro.net*

**Management Trainee**

Company: Bridges Worldwide PVT Ltd
Address: 66 Vivekananda Hill, Colombo 13.
*Email: email@thelastmile.lk*

**Cost Accountant**

Company: J & R Accounting Group LLC
Qualifications: BSc degree in Accounting of Finance, Computer Literacy, Strong time management skills with an attention to detail
*Email: ep@jracct.com*

**Chief Operating Officer**

Company: Shipex Lanka Holdings Pvt Ltd
Qualifications: Minimum 05 years of experience, Age between 30-45 years, A completed HND of Degree in Management or in another relevant field, Excellent communication skills.
Apply: *md@shipexlanka.com*

**Planter Trainees**

Company: Hayleys Group
*Email: hr@ttel.hayleys.com*

**Resident Manager (Hotel)/Legal cum Admin Officer**

Company: Orion Development (PVT) Ltd
Address: General Manager, Orion Development (PVT) Ltd, No: 752, Dr. Danister De Silva Mawatha, Colombo 09. *Asstacc1@orioncity.lk*

**Accountant**

Company: Solico International Pvt Ltd
*Email: secretary@solicolk.com*

**Ticketing Executives/Accounts Clerk/Clerk/ Office Cleaner**

Company: Ajma Travels Pvt Ltd.
Address: No 22, Dias Place, Gunasinghepura, Colombo 12.

**Marketing Executive/Office Co-ordinator/ Graphic Designer**

Company: Hammer Digital
Contact: 011 2883875/0777 756976





































மலையக கலை, கலாசார சங்கத்தின் (இரத்தின தீப) ஏற்பாட்டில் அறிஞர் சித்திலெப்பை, மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் க.ப.சிவம், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மற்றும் நடிகை மனோரமா ஆகியோரின் ஞாபகார்த்த நிகழ்வும் சமூகச் செயற்பாட்டாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், சான்றோர்கள் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வும் கண்டி கெப்பெட்டிப்பொல ஞாபகார்த்த மண்டபத்தில் தலைவர் ராஜா ஜேகின்ஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சிரேஷ்ட ஊடகவியலாளரும் சட்டத்தரணியுமான எ.எம்.வைஸ் கலந்துகொண்டு சிறப்பித்தார். இதன்போது கலாபூஷணம், எழுத்தாளருமான முத்து சம்பந்தர், கருணாதுங்க வெலிகல, சமூக செயற்பாட்டாளர் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன், சமூகப் பணியாளர்களான சந்தரவதனா ரட்ணராஜ குரு, இர்ஷாட் பாரூக், எம்.எம்.ஆர்., ரக்கீப், எஸ்.ஏ.ஹனீப், சரண் ஜீவா, எம்.எவ்.எம்.பாஸில், ஏ.டபிள்யூ.ஆர்.மிஹிரா தர்மசிறி, ஸ்ரீமதி ஆகியோருடன் கலாபூஷணம் இஸ்மாலிகா, கலாபூஷணம் இரா.அ.இராமன், மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் ஜே.எம்.ஹாபிஸ், கண்டி இந்து சீனியர் அதிபர் பி.சிவக்குமார், தமிழ் வர்த்தக சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் ஏ.தட்சணா மூர்த்தி ள்ளிட்ட பலர் கௌவிக்கப்பட்டனர். (இக்பால் அலி)

# இரத்தினபுரியில் 1337 சிறுவர்கள் மந்த போசணையால் பாதிப்பு

(பெல்மதுளை நிருபர்)

பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெரும்பாலான தோட்டங்களில் வாழும் சிறுவர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட பலரும் மந்த போசணையை எதிர்நோக்கி வருகின்றனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த சில மாதங்களில் ஐந்து வயதுக்கு குறைந்த சிறுவர்கள் ஆயிரத்து 337 பேர் மந்த போசணையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் டபிள்யூ.பி.சமன் திலக்க அண்மையில் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இவ்வாறான சூழ்நிலையில் இரத்தினபுரி மாவட்ட தோட்டத் தொழிலாளர்கள் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதனால் தினசரி மூன்று வேளை உணவுக்கு பதிலாக இருவேளை உணவுகளையே உட்கொள்கின்றனர். இந்த இருவேளை உணவும் முழுமையடையாத உணவுகளாக காணப்படுகின்றது. அதாவது பருப்பும் சோறும் மட்டுமே பிரதான உணவுகளாக காணப்படுவதனால் தோட்ட மக்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றனர்.

இதனால் தோட்டத் தொழிலாளர்கள் வாரத்தில் 6 நாட்களுக்கு பதிலாக 3 அல்லது 4 நாட்களே வேலைக்கு செல்கின்றனர். இதன் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் தமது வருமானத்தை பெருமளவு இழந்து வருகின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் தமது வருமானமின்மை காரணமாக தோட்ட சிறுவர்கள் மந்த போசணையை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, தோட்ட சிறுவர்கள் மந்த போசணையிலிருந்து மீண்டு வர அரசாங்கமும் தொழிற்சங்கங்களும் உரிய தீர்வு காணப்பட வேண்டுமென கோரிக்கை முன்வைக்கின்றனர்.



கம்பளை கல்வி வலயத்தில் உள்ள கலஹா யோகலட்சுமி தமிழ் வித்தியாலயத்தில் இரண்டு மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுள்ளனர். சித்திபெற்ற சுபாஷினி (149) ஆர். மயூரன் (148) ஆகிய மாணவர்கள் அதிபர் ஏ. அமுதா, வகுப்பாசிரியை வீ. சித்ராதேவி ஆகியோருடன் காணப்படுகின்றனர். (படம்: கண்டி செய்தியாளர்)

# மத்துகமையில் ‘செம்மை’ கல்வி நிறுவனம் திறப்பு




மத்துகமை, லப்பந்துரை, டெல்கித் சந்தியில் செம்மை கல்வி நிறுவனம் கோலாகல திறப்பு விழா நடைபெற்றது.

செம்மை படிப்பகத்தின் நிறுவனரும், அதிபருமான அ.தேவராஜாவின் ஒருங்கமைப்பில் நடைபெற்ற இந்த திறப்பு விழாவில், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக தன்னார்வலர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

லப்பந்துறை பகுதியில் அமைந்துள்ள டெல்கித், மொகமதி, அஸ்க்வெலி, பெலாந்த உள்ளிட்ட தோட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் விதமாக இந்த செம்மை படிப்பகம் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிவனொளிபாதமலைக்கு யாத்திரை வந்தவர் மரணம்

(மஸ்கெலியா செய்தியாளர்)

கல்கிஸை பகுதியில் இருந்து வந்த 89 வயதுடைய நிஷாந்த கல்தேரா என்பவர் நேற்று அதிகாலை வேளையில் சிவனொளிபாதமலைக்கு தரிசனம் செய்து விட்டு திரும்பி வரும் வழியில் மரணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ரத்து அம்பலம பகுதியில் வைத்து கடும் சுகயீனமுற்ற நிலையில் நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொலிஸார் உதவியுடன் 1990 அம்பியூலன்ஸ் மூலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதிக்கபட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இறந்தவரின் சடலம் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பிரேத பரிசோதனையின் பின்னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர கூறினார்.

இப்பகுதியில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் நிலவுவதுடன் மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நானுஓயா ரதெல்ல விபத்து பஸ் சாரதிக்கு பிணை


நுவரெலியா - நானுஓயா, ரதெல்ல குறுக்கு வீதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் கைது செய்யப்பட்ட பஸ்ஸின் சாரதியை 25ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நாலக சஞ்ஜீவ எதிரிசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஹொரண குடுஉடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதான இகுரகே ஞானரத்ன என்பவரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சந்தேகநபரான சாரதி, கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியில் இருந்து மாணவர்களை நுவரெலியா பகுதிக்கு சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றுவிட்டு மீண்டும் கொழும்பு நோக்கி பஸ்ஸினை செலுத்திக்கொண்டிருந்தபோது வேன் ஒன்றும் முச்சக்கரவண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் இடம்பெற்ற விபத்தில் வேனின் சாரதி உட்பட ஆறு பேர் மற்றும் முச்சக்கரவண்டியின் சாரதி ஆகியோர் உயிரிழந்துள்ளதுடன் பஸ்ஸில் இருந்த 41 பாடசாலை மாணவர்கள் உட்பட 53 பேர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









பதுளை மாவட்ட செயலகமும் பதுளை பிரதேச செயலகமும் இணைந்து மாவட்ட செயலக வளாகத்தில் நடத்திய தைப்பொங்கல் விழாவையும் பூஜை நிகழ்வுகளையும் கோலப்போட்டி இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

(படப்பிடிப்பு: பதுளை செய்தியாளர்)

# தென்னிலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டப் போராடும் போராளிகள் தமிழ் மக்களின் அரசியல் நீதி கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும்

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா தெரிவிப்பு




தென்னிலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டப் போராடும் போராளிகள் தமிழ் மக்களின் அரசியல் நீதி கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும் - என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாரிய பொருளாதார நெருக்கடி நிலையின் மத்தியிலும் இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் முடிவெடுத்து நிற்கின்ற சூழ்நிலையில், சுதந்திர தினக் கொண்டாட்டத்தை புறக்கணிக்கப் போவதாகவும் மனித உரிமை மீறல்கள் இந்த அரசாங்கத்தில் தொடர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினால் இன்று மாலையிலிருந்து போராட்டம் நடத்தப் போவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மத்தியில் இவ்வாறான ஒரு கொண்டாட்டம் தேவைதானா? அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில் இதில் கலந்துகொள்ள முடியுமா? என்ற கேள்விகளையெல்லாம் எழுப்பி கத்தோலிக்க திருச்சபை இதனை புறக்கணிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றது.

பல்வேறு சிவில் அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன 75ஆவது சுதந்திர தினத்தை துக்க நாளாக - கரிநாளாக பிரகடனப்படுத்தி இருக்கின்றார்கள்.

பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து மட்டக்களப்பில் முடிவடையும் விதத்தில் ஒரு பாரிய பேரணிக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்கள். இந்த அழைப்பிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வெளியிட்டிருக்கின்ற சூழ்நிலையில், சில கருத்துகளை பொது வெளியில் முன்வைப்பது பொருத்தமானது - அவசியமானது என்று கருதுகின்றோம்.

தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிப்பது இது முதல்தடவையல்ல, தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் நீதி தொடர்பில் ஒரு திட்டவட்டமான நிலைப்பாட்டிற்கு தென்னிலங்கையில் ஜனநாயகத்தின் பெயரில் குரல் எழுப்புகின்ற போராடுகின்ற அனைத்து முற்போக்கு சக்திகளும் வர வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

13ஆவது திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு இரண்டு வாரங்கள் போதும். ஆனால், இலங்கை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக பகிரங்கமாக அறிவித்திருக்கின்ற சூழ்நிலையில் அது தொடர்பில் அரசாங்க தரப்பிலிருந்து பல்வேறு எதிர்ப்புக் குரல்கள் இப்போது எழுந்து கொண்டிருக்கின்றன.

பதவியை விட்டு விரட்டியடிக்கப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளர்களாக கடைசிவரையில் இருந்தவர்கள் - இப்பொழுதும் இருந்துகொண்டிருப்பவர்கள் - அரசாங்க தரப்பில் அமர்ந்துகொண்டிருப்பவர்கள் பலர் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுத்துவதற்கு எதிராக போர்க்கொடி தூக்குகின்றார்கள்.

தென்னிலங்கையில் ஜனநாயக எழுச்சியை மீளக் கொண்டுவர தயாராக இருக்கின்ற இளைஞர் சந்ததியினருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் அரசியல் நடவடிக்கையாளர்களுக்கும் தொழிற்சங்கவாதிகளுக்கும் ஒரு செய்தியை தாழ்மையாகவும் உறுதியாகவும் சொல்ல விரும்புகின்றோம்.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் இந்த நாட்டில் ஆட்சியமைப்பு முறையை மாற்றியமைப்பதற்கு சிங்கள முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து ஆதரவளிக்க வேண்டும்.

ஜனநாயக போராளிகளாக தென் பகுதியில் மக்கள் மத்தியில் நிலவி வருகின்றவர்கள் தமிழ் மக்களின் அரசியல் நீதி கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். தமிழ் மக்களின் கோரிக்கையை அவர்கள் ஏற்காதவரையில் அவர்களின் ஜனநாயக ரீதியான எந்தவொரு போராட்டத்திற்கும் தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்காது.

எனவே தென்பகுதியில் ஜனநாயக ரீதியில் போராடும் இளைஞர், யுவதிகள், அரசியல்வாதிகள், முற்போக்கு சக்திகள் எமது தமிழ் மக்களின் அரசியல் நீதியினை ஏற்க வேண்டும் – என்றார்.

# டென்மார்க்கில் உள்ளவர் பணம் அனுப்பி கல்வியங்காடு கடைக்குள் வன்முறை; முதன்மை சந்தேக நபர் கைது!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியிலுள்ள கடை ஒன்றினுள் வாள்களுடன் புகுந்து அடாவடியில் ஈடுபட்டுவிட்டு 5 இலட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்களை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முதன்மை சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை ஒன்றின் அபிவிருத்திச் சங்க முரண்பாடு காரணமாக டென்மார்க்கிலுள்ள ஒருவர் பணம் அனுப்பி இந்த வன்முறையை வழிநடத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே இந்த கைது மற்றும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்தச் சம்பவம் ஜனவரி மாத நடுப்பகுதியில் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோப்பாய் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் லக்சாந் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நேற்று மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

முன்பகை காரணமாக இந்த அடாவடி மற்றும் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளில் யாழ்ப்பாணம் கலட்டி பகுதியில் வைத்து முதன்மை சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் டென்மார்க்கில் உள்ளவர் பணம் அனுப்பியே வர்த்தக நிலையத்துக்குள் புகுந்து வன்முறையில் ஈடுபட்டதாகத் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர்.

பாடசாலை ஒன்றின் அபிவிருத்திச் சங்கத்துடன் ஏற்பட்டுள்ள முரண்பாடே கூலிக்கு ஆள்வைத்து அச்சுறுத்தும் வகையில் இந்தச் சம்பவம் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்துடன் 7 பேர் தொடர்புடைய நிலையில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலும் மூவர் தேடப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கொடிகாமத்தில் இடம்பெற்ற கத்திக்குத்தில் இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி விசேட நிருபர்)



கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மிருசுவில் பகுதியில் நேற்று முன்தினம் (01) இரவு இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மிருசுவில் பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் வைத்து குறித்த கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பாலாவி பகுதியைச் சேர்ந்த 26 வயதான இளைஞன் ஒருவர் இரு கைகளிலும் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilanbusiness@gmail.com

## இலங்கையின் முதலாவதும் ஒரேயொரு CO2 உறிஞ்சும் ஸ்மார்ட் நிறப்பூச்சான GRAPHENSTONE இனை அறிமுகப்படுத்தும் DIMO

இலங்கையின் முன்னணியிலுள்ள பல்வகைத் துறை கூட்டு நிறுவனமான DIMO, GRAPHENSTONE நிறப்பூச்சை வெளியிட்டுள்ளதன் மூலம் இலங்கையின் முதலாவதும், ஒரேயொரு கார்பனீரொட்சைட் (CO2) உறிஞ்சும் ப்ரீமியம் ஸ்மார்ட் நிறப்பூச்சு (பெயிண்ட்) மூலம் உள்நாட்டு அலங்கார வண்ணப்பூச்சுத் துறையின் வெளியை மாற்றியமைத்துள்ளது.

GRAPHENSTONE என்பது ஸ்பெயினில் வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னணி சூழலியல் ரீதியான நிறப்பூச்சு ஆகும். இது சுண்ணாம்பு மற்றும் காரிய (graphene) தொழில்நுட்பத்தை ஒரு தனித்துவமான சூத்திரத்தில் ஒருங்கிணைக்கிறது. இது GRAPHENSTONE புத்தாக்க தொழில்நுட்பம் என அழைக்கப்படுகிறது. சுண்ணாம்பு, ஓர் இயற்கையானதும், முற்றிலும் கைவினைக்குரிய பொருளாகும் என்பதோடு, அது வலிமை மற்றும் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துகின்ற காரிய (graphene) பொருளால் நிரப்பப்படுகிறது. இங்கு பாரம்பரியம், புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் சரியான கலவையானது, அதிக தரம் கொண்ட, நீண்ட ஆயுள் மற்றும் குறைந்த பராமரிப்பு தேவை கொண்ட ப்ரீமியம் வகையிலான சூழல் நட்புடனான நிறப்பூச்சுகளை உருவாக்க உதவுகிறது. இது கணிசமான சேமிப்பையும் உருவாக்குகிறது.



GRAPHENSTONE வழங்கும் இணையற்ற வகையிலான சூழல் நட்பு ஸ்மார்ட் நிறப்பூச்சுகள்

DIMO குழுமத்தின் சில்லறை வணிகத்தை மேற்பார்வையிடும் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் விஜித பண்டார இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், “DIMO நிறுவனத்தின் மூலோபாய அணுகுமுறையானது, எமது பரவலைடைந்து வரும் தயாரிப்பு வகைகளில் நிலைபேறான, புத்தாக்கமான தயாரிப்புகள் மற்றும் சேவைகளை இணைப்பதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வருகிறது. இலங்கையில் முதலாவதும், ஒரேயொரு ஸ்மார்ட் நிறப்பூச்சை (பெயிண்ட்) அறிமுகப்படுத்துவதானது, DIMOவின் வணிக அணுகுமுறையின் மூலம் நிலைபேறான தன்மையை நோக்கிய அதன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. சூழலுக்கான நிலைபேறான தன்மைக்கு வழி ஏற்படுத்துவதன் மூலம், நாம் சேவை செய்யும் சமூகங்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளை ஊக்குவிப்பதற்கான எமது தொடர்ச்சியான முயற்சிகளையும் இது பிரதிபலிக்கிறது. உலகில் மிகவும் பசுமை வாய்ந்தது என சான்றளிக்கப்பட்ட வர்த்தக நாமமான GRAPHENSTONE உடன் இணைந்து, இந்த புத்தாக்கமான நிறப்பூச்சுகளை நாம் இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளோம்” என்றார்.

DIMO நிறுவனத்தின் GRAPHENSTONE தயாரிப்புகளானவை, வெளிப்புற மற்றும் உட்புற பூச்சு வகைகளைக் கொண்டுள்ளது. உட்புற (interior) வகைகளின் கீழ், DIMO Ecosphere மற்றும் GrafClean Ag+ ஆகியன உள்ளூர் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வெளிப்புற (Exterior) வகைகளின் கீழ், Biosphereஇனை DIMO அறிமுகப்படுத்தியுள்ள அதேசமயம், Undercoating பிரிவில், உயர் Ph சுண்ணாம்பு அடிப்படையிலான கலவை கொண்ட Primer Plus அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது கார்பனீரொட்சைட்டை (CO2) உறிஞ்சும் மைக்ரோபிளாஸ்ரிக் அற்றதாகும்.

## Allianz அறிமுகப்படுத்தம்
## h hc nd n

Allianz Child Protector என்ற வடிவில் பிள்ளைகளுக்கான தீவிர நோய்க்கான காப்புறுதித் திட்டத்தை அலியான்ஸ் லங்கா அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஒரு தனித்துவமான காப்புறுதித் திட்டமாகும். இது வாழ்க்கையின் மிகவும் விலையுயர்ந்த பரிசான எங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கும்போது உங்களுக்கு நிதிப் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் வழங்குகிறது. Allianz Child Protector ஆனது 6 திட்டங்களை வழங்குகிறது. இது அனைத்து வகையான வரவு–செலவுத் திட்டங்களுக்கும் ஏற்ற வகையில் பெற்றுக்கொள்ள வசதியாக உள்ளது. வருடாந்த கட்டுப்பணத்தொகையானது வருடத்திற்கு வெறும் ரூபா 3,150இல் ஆரம்பிக்கிறது.

Allianz Child Protector மூலம், உங்கள் பிள்ளை தீவிர நோய்களுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கான காப்புறுதியையும், அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்படும்போது நாள் அடிப்படையிலான காப்புறுதியையும், அத்தகைய மருத்துவமனைகளில் மருத்துவக் கட்டணங்கள் மற்றும் மருத்துவ சோதனைகளுக்கு செலுத்துகின்ற தொகைகளை மீளப் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் Allianz Child Protector உங்கள் பிள்ளைக்கு தனிப்பட்ட விபத்திற்கான நன்மைகளையும் வழங்குகிறது. அதேநேரத்தில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் 55 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாக இருந்தால் தனிப்பட்ட விபத்திற்கான நன்மைகளை அவர்களும் அனுபவிக்க முடியும். டெங்கு இரத்தக்கசிவு காய்ச்சல், புற்றுநோய், முடக்குவாதம், இருதய அறுவைசிகிச்சை, மூளைக் கட்டிகள், முக்கிய உறுப்பு மாற்று அறுவைசிகிச்சை, பக்கவாதம், கோமா, முழுமையான கல்லீரல் செயலிழப்பு, தூக்கத்தின்போது மூச்சுத்திணறல் மற்றும் பித்தப்பை அகற்றுதல் ஆகியவை Allianz Child Protector இன் கீழ் உள்ள கடுமையான நோய்களில் அடங்கும்.

Allianz Child Protector ஆனது 2 முதல் 17 வயது வரை உள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் கிடைக்கிறது. உரிய கட்டணங்களை செலுத்திய பின்னர் இழப்பீட்டுக்கோரலை நீங்கள் முன்வைக்கும்போது உரிய தொகை உங்களுக்கு வழங்கப்படுகிறது.

## டயலொக் ‘Futureverse’ அறிமுகப்படுத்தும் Metaverse




நாட்டிலும் பிராந்திய மட்டத்திலும் தொழில்நுட்பத்தில் முதன்மை இடத்தை வகிக்கும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, ‘Futureverse’ ஐ அறிமுகப்படுத்தியிருப்பதன் ஊடாக இலங்கையின் முதலாவது முழு அதிவேக, ஊடாடும் மற்றும் அனுபவமிக்க Metaverseஇல் மக்கள் டயலொக் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பெறவும் நிகழ்வுகளில் கலந்து கொள்ளவும் மற்றும் கேம்ஸ்களை விளையாடவும் முடியும். மொத்தத்தில் ஒரு நிலையான மெய்நிகர் உலகத்தை அனுபவிக்கும் வாய்ப்பு இதன்மூலம் கிடைக்கும்.

‘Futureverse’ என்பது ஒரு அதிவேக மற்றும் ஊடாடும் மெய்நிகர் உலகமாகும், இதில் பாவனையாளர்கள் தங்கள் சொந்த தனிப்பயன் உருவமைப்புகளை உருவாக்க முடியும். இந்த மெய்நிகர் உலகினை பார்வையாளர்கள் அனைத்து டயலொக் வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் பெறலாம். இதனூடே அனைத்து டயலொக் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை அணுகவும், நண்பர்களுடன் இணைந்துகொள்ளவும், திரைப்படங்களைப் பார்க்கவும், பட்டறைகளில் பங்கேற்கவும், கண்காட்சிகளைப் பார்வையிடவும் முடிவதுடன் இன்னும் பலவற்றையும் அணுகிடலாம்.

## சியபத பினான்ஸ் கிளிநொச்சியில் 43ஆவது கிளையினை திறந்தது



சம்பத் வங்கி குழுமத்தின் முழுமையான துணை நிறுவனமான சியபத பினான்ஸ் தனது 43ஆவது கிளையை அண்மையில் கிளிநொச்சியில் திறந்துவைத்துள்ளதுடன், வடமாகாணத்திலுள்ள தனது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு தனது நிதிச் சேவைகளை விரிவுபடுத்தி, சிறந்த சேவையை வழங்குவதற்கான அர்ப்பணிப்பையும் தொடர்கிறது.

நாடளாவிய ரீதியில் இயங்கும் அதன் வலையமைப்பில் இணைந்துள்ள இல. 317, காக்கடைச் சந்தி, ஏ-9 வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி கிளையானது, சியபத நிதி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஆனந்த செனவிரத்னவினால் கரைச்சி பிரதேச செயலாளர் பாலசுந்தரம் ஜெயஹரன், மத்திய வங்கியின் பிராந்திய முகாமையாளர் (கிளிநொச்சி) திருமதி கார்த்திகா நிரோஜன் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.ஆர்.ஏ.குணரத்ன ஆகியோர் முன்னிலையில் வைபவ ரீதியாக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

அதிகளவிலான வாடிக்கையாளர்களை ஈடுபடுத்துதல் மற்றும் அப்பகுதியிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன், புதிதாக முழுமையாக தன்னிறைவு பெற்ற அதிநவீன வசதிகளைக்கொண்ட கிளை, வாடிக்கையாளர்களுக்கு சேமிப்பு, நிலையான வைப்பு, குத்தகை, வாடகை கொள்முதல், வணிகக் கடன்கள், தங்கக் கடன்கள், தனிநபர் கடன்கள், சுழலும் கடன்கள், அத்துடன் வர்த்தக பிரதிநிதி சேவைகள் உள்ளிட்ட விரிவான சேவைகளை வழங்கத் தயாராக உள்ளது.


## சாதனைகள் நிறைந்த ஆண்டைக் கொண்டாடும் பெல்வத்தை



Pelwatte Dairy Industries Pvt Ltd ஆனது பால் பதப்படுத்துதல், கால்நடை தீவனம், பால் உற்பத்திகள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற ஒரு முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமமாகும். இந்நிறுவனம் சமீபத்தில் தனது பணியாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வொன்றை நடத்தியிருந்தது. பெல்வத்தை நிறுவன ஊழியர்களின் கடின உழைப்பை மதிப்பிடுவதும் பாராட்டுவதும் இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது. அத்துடன், பெல்வத்தை நிறுவனத்தின் பால் கொள்முதல் பிரிவின் குறிப்பாக, அதன் களப் பணி ஊழியர்கள் மற்றும் பின்புல பணி ஊழியர்களுக்கு பாராட்டு தெரிவிக்கும் வகையிலான கொண்டாட்ட நிகழ்வும் இதன்போது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியில் நிறுவனத்தின் பல முக்கிய சாதனைகள் மற்றும் எதிர்காலத்திற்கான திட்டங்கள் தொடர்பான அறிவிப்புகளும் முன்வைக்கப்பட்டன.

கடந்த வருடத்தில் நிறுவனம் எட்டிய 150 ஆயிரம் சாதனையாளர்கள் எனும் குறிப்பிடத்தக்க சாதனை மைல்கல்லை எட்டியமை தொடர்பில் பெல்வத்தை டெய்ரி இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவர் ஆரியசீல விக்ரமநாயக்க, இங்கு விளக்கமளித்தார். தினமும் 1,50,000 லீற்றர் பாலை சேகரிக்கும் நிறுவனத்தின் ஆற்றலை இது சுட்டிக்காட்டுகிறது. இது பெல்வத்தை நிறுவனத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்களான GM, DGM, CFO, பணிப்பாளர் திலக் பியதிகம ஆகியோர் இந்நிகழ்வில் உரையாற்றியதோடு, பெல்வத்தை நிறுவனத்தின் எதிர்காலம் தொடர்பான கற்பனையின் ஆற்றல் தொடர்பில் அவர் இங்கு விளக்கமளித்தார்.

## இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை வழங்கும் செலான் கிரெடிட் கார்ட்ஸ்



வாழ்க்கையின் சகல அத்தியாவசிய தேவைகளையும் நிவர்த்தி செய்துகொள்வதற்கு அவசியமான பொருட்களை நிதிச் சுமையின்றி கொள்வனவு செய்துகொள்வதற்காக செலான் கிரெடிட் கார்ட்ஸ், இலகுக் கொடுப்பனவுத் திட்டங்களை 0% வட்டியில்லாத் தவணை முறையில் மீளச் செலுத்தக்கூடிய வசதியுடன் வழங்குகின்றது.

2023ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலகு முறை கொடுப்பனவுத் திட்டங்களின் அறிமுகத்துடன், அட்டைதாரர்களால் பாரிய தொகையை ஒரே தடவையில் செலுத்தும் நிதிச் சுமையை அனுபவிக்கவேண்டியதில்லை என்பதுடன், தமது நிதித் திட்டமிடலை இலகுவாக மேற்கொள்வதற்கு உதவியாக அமைந்துள்ளது.

வருடத்தின் முற்பகுதியில் கல்வியுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் என்பது பல அட்டைதாரர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருப்பதை உணர்ந்து, செலான் கார்ட்ஸ் 3 மாத காலப்பகுதிக்கு இந்த இலகு தவணை முறை மீளச் செலுத்தல் வசதியை பாடசாலைக் கட்டணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக வழங்கியுள்ளது. மேலும், நாட்டின் முன்னணி புத்தகசாலைகள் மற்றும் காகிதாதிகள் விற்பனை நிலையங்களில் மேற்கொள்ளும் சகல பொருட் கொள்வனவுகளுக்கும் இந்தத் திட்டம் பொருத்தமானதாக அமைந்திருக்கும்.

அட்டைதாரர்கள் தமது பொறுப்புகள் மற்றும் ஓய்வு ஆகியவற்றுக்கிடையே ஆரோக்கியமான சமநிலையைப் பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை அறிந்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரயாணங்கள், ஹோட்டல் தங்குமிடங்கள், விமானப் பயணச் சீட்டுகள், விசா கட்டணங்கள் போன்றவற்றுக்கு 3 மாதங்களுக்குள் மீளச் செலுத்தக்கூடிய வகையில் இலகு தவணை முறை செலுத்தும் வசதி வழங்கப்பட்டுள்ளது. தொற்றுப் பரவலுக்கு பின்னரான காலப்பகுதியில், அட்டைதாரர்களுக்கு தமக்கு பிடித்த பகுதிகளுக்கு பெருமளவு தொகையை ஒரே தடவையில் செலுத்தாமல், பிரயாணம் செய்வதற்கு இந்த வாய்ப்பு பயனளிப்பதாக அமைந்திருக்கும்.

## 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு SLT-MOBITEL இடமிருந்து 75GB YouTube டேட்டா




தேசத்தின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தனது ஹோம் புரோட்பான்ட் வாடிக்கையாளர்களுக்கு 75GB YouTube டேட்டாவை வழங்க முன்வந்துள்ளது.

பெருமளவான சலுகைகள் மற்றும் அனுகூலங்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. வாடிக்கையாளர்களை பெறுமதி வாய்ந்த பாவனையாளர்களாக கௌரவிக்கும் வகையில், விசேட சுதந்திர தின அன்பளிப்பாக SLT-MOBITEL ஹோம் புரோட்பான்ட் வாடிக்கையாளர்களுக்கு இந்த 75GB YouTube டேட்டா சலுகை வழங்கப்பட்டுள்ளது.

2023 பெப்ரவரி முதலாம் திகதிமுதல் 4ஆம் திகதிவரை இந்த விசேட டேட்டா சலுகை வழங்கப்படுவதுடன், செயற்படுத்தப்பட்டதிலிருந்து 7 தினங்கள் வரை செல்லுபடியாகும். இந்த டேட்டா அன்பளிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு, வாடிக்கையாளர்கள் MySLT App/Portal இல் செயற்படுத்திக்கொள்ள வேண்டும். சுதந்திர தின இலவச சலுகையை, menu இல் Data Add-Ons பகுதியில் பார்வையிட முடியும் என்பதுடன், செயற்படுத்திக்கொள்ளலாம். இந்த இலவச சலுகையை எந்தவொரு YouTube உடன் தொடர்புடைய செயற்பாட்டிலும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

## இலங்கையின் சிறந்த நிறுவனமாக மகுடம் சூடிய யுனிலீவர்

அண்மையில் இடம்பெற்ற'Best Corporate Citizen Sustainability Awards 2022' (சிறந்த ஒன்றிணைக்கப்பட்ட பிரஜை நிலைபேறானதன்மை விருதுகள் 2022) விழாவில், ஊழியர் உறவுகளை வளர்ப்பதில் சிறந்த செயல்திறனுக்கான பிரிவின் (Best Performance in fostering Employee Relations) விருதை யுனிலீவர் ஸ்ரீலங்கா (Unilever Sri Lanka) நிறுவனம் பெற்றுள்ளது. இந்த விருதை யுனிலீவர் நிறுவனத்திற்கு இலங்கை வர்த்தக சம்மேளனம் வழங்கியிருந்தது. ஊழியர்களின் ஈடுபாடு, பயிற்சி, தொழில் விருத்தி, நல்வாழ்வு, இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பன்முகத்தன்மை, உள்ளீர்த்தல் ஆகியவற்றில் சிறந்த ஊழியர் நிகழ்ச்சி நிரல் மற்றும் பொது நடைமுறைகளை பேணியமை தொடர்பில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. நிறுவனம் முழுவதும் நெகிழ்ச்சியான மற்றும் உற்பத்தித் திறனை வழங்கக்கூடிய ஊழியர்களைக்கொண்ட ஒன்றிணைக்கப்பட்ட கலாசாரத்தை இது உருவாக்கியுள்ளது.

Best Corporate Citizen Sustainability Awards ஆனது, உள்ளூர் பொருளாதாரம், சமூகம், சூழலுக்கு சிறந்த பங்களிப்பாளர்களுக்கு அங்கீகாரத்தை வழங்குகின்ற, இலங்கையின் மிக உயர்ந்த பெருநிறுவன விருதாகக் கருதப்படுகிறது.

யுனிலீவர் ஸ்ரீலங்காவின் மனிதவளப் பணிப்பாளர் அனன்யா சபர்வால் இது தொடர்பில் தெரிவிக்கையில், இந்த அங்கீகாரத்தைப் பெறுவதில் நாம் பெருமை அடைகிறோம். இது சரியான நேரத்திலும், முற்போக்கான கொள்கைகள் மூலம் எமது ஊழியர்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் பணியிடத்தைப் பேணுவதற்கான எமது முயற்சிகளுக்கு சாட்சியமளித்துள்ளது – என்றார்.



www.thamilan.lk

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

thamilanbusiness@gmail.com

## இலங்கை பாடசாலை மாணவர்களின் ICTA தரத்தை மேம்படுத்தும் AIA இன்ஷூரன்ஸ்



லைட்டினிங் டிஜிட்டல் தேசிய மன்றத்தில் இலங்கைப் பாடசாலை மாணவர்களின் ICTA தரத்தை மேம்படுத்தும் தனது பங்களிப்பிற்காகப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ள இலங்கையின் ஒரேயொரு காப்புறுதி வழங்குநர் என்ற பெருமையினை AIA தனதாக்கியிருக்கின்றது. இலங்கையில் ஒரு சிறந்த எதிர்காலத்திற்காக வேகமான மற்றும் வினைத்திறனான டிஜிட்டல் மாற்றத்தை ஆதரித்து இலங்கையின் திறன் மேம்பாட்டு முயற்சிகளுக்கு உதவுவதற்காக AIA இன்ஷூரன்ஸ் தனது பெறுமதியான உதவிகளை வழங்கியிருக்கின்றது. இந்த வகையில், டிஜிட்டல் கல்வியில் விரைவான மாற்றத்தின் மூலம் இலங்கையர்களின் டிஜிட்டல் நல்வாழ்வை மேம்படுத்தவும் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையை வலுப்படுத்தி முன்னேற்றும் இளைஞர்களை வலுவூட்டவும் நிறுவனம் மடிக்கணினிகள் மற்றும் ஐபேட்களை வழங்கியிருந்தது. உண்மையில் இப்பங்களிப்பு பெரிதும் பாராட்டப்பட்டுள்ளதுடன், நாட்டினுடைய திறன் மேம்பாட்டு முயற்சிகளின் வெற்றியை உறுதிசெய்துமுள்ளது. இந்த மன்றத்தின் திட்டத் தலைமையாக AIA பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதுடன், நிறுவனத்தின் பிரதான தொழில்நுட்ப அதிகாரி உமேஷி டி பொன்சேகா மற்றும் வியாபார கையகப்படுத்தல் மற்றும் அழைப்பு மையத்தின் சிரேஷ்ட முகாமையாளர் சுரேனி டி அல்விஸ் ஆகியோர் AIA இன் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டிருந்தனர்.

## T20 உலகக் கிண்ணம் 2023 இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியினரின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்கள் சைக்கள் அகர்பத்தி






இந்தியாவின் NR குழுமத்துக்கு சொந்தமான சைக்கள் பியோர் அகர்பத்தி – Cycle Pure Agarbathi, தென் ஆபிரிக்காவில் இடம்பெறவிருக்கும் ICC மகளிர் T20 உலகக் கிண்ணம் 2023 போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை கிரிக்கெட் அணியினருக்கான உத்தியோகபூர்வ அனுசரணையாளர்கள் என தங்களை அறிவித்தது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை கிரிக்கெட் அணியின் உதவிச் செயலாளர் – கிரிஷாந்த கபுவத்த, இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவர் – சாமரி அதபத்து மற்றும் அவரது அணி அங்கத்தவர்கள் (SLC) மற்றும் அர்ஜுன் ரங்கா – முகாமைத்துவ பணிப்பாளர் –Cycle Pure Agarbathi ஆகியோரும் கலந்துகொண்டனர். இலங்கை மகளிர் அணியினரின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்கள் என்ற வகையில் Cycle Pure வர்த்தகக் குறியீடு இலங்கை அணியினரின் ஜேர்சியின் வலது கையில் பொறிக்கப்பட்டிருக்கும்.

## D&R Exports நிறுவனத்துக்கு NCE வெள்ளிப்பதக்க விருது



உள்நாட்டு உணவு வகைகளை ஏற்றுமதி செய்து வரும் D&R Exports நிறுவனம் தேசிய ஏற்றுமதிச் சபை (NCE) ஏற்பாடு செய்த உயர் ஏற்றுமதி விருதுகள் – 2022 விருது விழாவில் மத்தியளவிலான பிரிவின் வெள்ளிப் பதக்க விருதை வென்றுள்ளது. அரலிய பெயரில் 1993ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அரலிய இம்பெக்ஸ் நிறுவனம் பின்னாளில் அரலிய எக்ஸ்போர்ட்ஸ் என்ற பெயரில் ஏற்றுமதி நடவடிக்கைகளை தொடங்கியது. அதை தொடர்ந்து 2013ஆம் ஆண்டில் D&R Exports நிறுவனம் தொடங்கப்பட்டது. அவுஸ்திரேலியா, டுபாய், ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சைப்பிரஸ், கட்டார், குவைட் போன்ற நாடுகளுக்கு தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் D&R Exports நிறுவனத்துக்கு ISO 9001:2008, ISO 9001:2022, HSSAP, GMP போன்ற தரச் சான்றுகளும் கிடைத்துள்ளன. இந்த வெற்றியில் பங்கெடுத்த பணியாளர்களுக்கும், வழங்குநர்களுக்கும், கொள்வனவாளர்களுக்கும், மக்கள் வங்கிக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். கோவிட் பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியிலும் ஊழியர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து நாம் எமது ஏற்றுமதி நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்தோம் என D&R Exports நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி எம்.ராஜ்குமார் தெரிவித்தார். குடிசைக் கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளுக்கு ஏற்றுமதி சந்தையொன்றை உருவாக்குவதே எமது அடிப்படை நோக்கமாகும். குறிப்பாக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல உற்பத்தியாளர்களும் எம்முடன் கைகோர்த்துள்ளனர் என நிறுவனத்தின் அதிபர் திருமதி மானெல் ராஜ்குமார் தெரிவித்தார்.

## Lanka Industrial Estates Limited வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளது




இலங்கையின் முன்னோடி மற்றும் முதன்மையான தொழில்துறை உட்கட்டமைப்பு சேவை வழங்குநரான, லங்கா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் லிமிட்டெட் (LINDEL), காணி மற்றும் ஆதனத் துறையில் சிறந்த வருடாந்த அறிக்கைக்கான TAGS வெள்ளி விருதை அண்மையில் வென்றுள்ளது. இந்த விருது LINDEL க்கு 57ஆவது வருடாந்த வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், ஆட்சி நிர்வாகம் மற்றும் நிலைபேற்றியல் (Transparency, Accountability, Governance and Sustainability –TAGS) விருதுகள் நிகழ்வில் வழங்கப்பட்டது, இந்நிகழ்வானது TAGS அறிக்கையிடலில் சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் கற்கை நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. 2021/22 நிதியாண்டிற்கான LINDELஇன் ஆண்டு அறிக்கையை நிலைபேண்தகு உள்கட்டமைப்பு (Sustainable Infrastructure) என்ற தலைப்பின் கீழ் இந்த விருது அங்கீகரித்துள்ளது. கடந்த ஆண்டு இதே பிரிவில் வெண்கல விருதை வென்றிருந்த LINDEL, வருடாந்த TAGS விருதுகளில் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக இம்முறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## 500 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு Global Vision Foundation அமைப்பிடமிருந்து சத்துணவுப் பொதிகள்



அம்பாந்தோட்டை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறுகின்ற 2000 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு உணவுகள் அடங்கிய சத்துணவுப் பொதிகளை வழங்கும் நோக்கத்துடன் Global Vision Foundation அமைப்பு ஏற்பாடு செய்த சமூகப் பணித் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமங்களைச் சேர்ந்த 500 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் அம்பலாந்தோட்டை பிரதேச சபை வளாகத்தில் நடைபெற்றது. Global Vision Foundation (சுனில் கமகே அறக்கட்டளை) தலைவரும் ஜப்பான் நாட்டுக்கான இலங்கையின் கொன்சல் ஜெனரலுமான சுனில் கமகேவின் ஏற்பாட்டிலும் ஜப்பான் நாட்டின் Tex Technology Incorporation தலைவர் Tetsuro Yoshidaவின் அனுசரணையிலும் நடைபெற்ற மேற்படி கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வில் அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாக மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் பலரும் ஜப்பான் தூதுவராலயத்தைச் சேர்ந்த நிறைவேற்று அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வறுமையை போக்குவதோடு கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் சிறுவர்களின் போசாக்கு மட்டத்தை உயர்த்தும் நோக்கத்துடன் மேற்படி சமூகப் பணித் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வாறான மேலும் பல கருத்திட்டங்களை எதிர்காலத்தில் தொடங்குவதற்கு Global Vision Foundation எதிர்பார்த்துள்ளது. அதற்காக ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

## தாய்லாந்து மற்றும் ஈரானிய பிரதிநிதிகளை வரவேற்றுள்ள கொழும்பு துறைமுக நகரம்




கொழும்பு துறைமுக நகரம் (PCC), தாய்லாந்து – இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை – தாய்லாந்து வர்த்தக சபை மற்றும் ஈரான் தூதரகத்தின் சிரேஷ்ட பிரதிநிதிகள் குழுவை அண்மையில் வரவேற்றிருந்தது. இந்த செயற்திட்டத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதே இந்த விஜயத்தின் நோக்கமாகும். தாய்லாந்து – இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அக்ரம் சரூஃப் மற்றும் இலங்கை – தாய்லாந்து வர்த்தக சபையின் முன்னாள் தலைவர் ரிஸான் நசீர் மற்றும் ஈரான் தூதரகத்தின் பொருளாதார மற்றும் தூதரகப் பிரிவின் தலைமை அதிகாரியான கே. சொஹைல் ஆகியோர் இத்தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கினர். CHEC Port City Colombo (Private) Limited இன் சார்பில் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் துல்சி அலுவிஹார, பிராந்திய முதலீட்டு ஊக்குவிப்புத் தலைவர் (ஆசிய பசுபிக்) கலாநிதி சராயுத் லெக்பிலிபொல், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தலுக்கான நிர்வாகப் பணிப்பாளரான ஷாலக விஜேரத்ன மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தலுக்கான பணிப்பாளரான ராதிகா ஒபேசேகர ஆகியோர் தலைமையிலான சிரேஷ்ட முகாமைத்துவ அணியினர் இப்பிரதிநிதிகள் குழுவினரை வரவேற்றனர். இந்த விஜயத்தின்போது, அபிவிருத்தித் திட்டம் தொடர்பான ஏற்பாடுகளை பார்வையிடுவதற்காக விரிவான சுற்றுப்பயணத்தை பிரதிநிதிகள் குழுவினர் மேற்கொண்டதுடன், எதிர்காலத் திட்டங்களைப் பற்றிய கண்ணோட்டத்தையும் அறிந்து கொண்டனர். கொழும்பின் மையத்தில் 269 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்ட இலங்கையின் மிகப்பெரிய கலப்பு அபிவிருத்தித் திட்டமாக PCC அமைந்துள்ளதுடன், நாட்டிற்கான புதிய பொருளாதார மையமாக மாறி, உலகளவில் கவர்ச்சிகரமான வணிக மற்றும் குடியிருப்பு வாய்ப்புகளை வழங்கவுள்ளது. வேலை வாய்ப்பு தோற்றுவிப்பு, வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் வெளிநாட்டு நாணய மூலதன உட்பாய்ச்சலின் அதிகரிப்பு உட்பட இலங்கைக்கு கணிசமான நன்மைகளை இத்திட்டம் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய நாணயத்தில் NOSTRO கணக்கைத் திறந்துள்ள கொமர்ஷல் வங்கி

116 வருடங்கள் பழமையான இந்தியன் வங்கி மும்பாயில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் கொமர்ஷல் வங்கி இந்திய நாயணத்தில் NOSTRO கணக்கைத் திறந்துள்ளதாக அறிவித்துள்ளது.

சார்க் பிராந்தியத்தில் வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க இந்திய நாணயத்தை ஒரு வெளிநாட்டு நாணயமாக இலங்கை மத்திய வங்கி வகைப்படுத்தியதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக

COMMERCIAL BANK

கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது. இந்திய நாணயத்தில் NOSTRO கணக்கை ஸ்தாபித்துள்ளதன் மூலம் இலங்கை மற்றும் இந்திய ஏற்றுமதி இறக்குமதியாளர்கள், இரு தரப்புக்கும் நன்மை அளிக்கும் வகையில் இந்திய ரூபாவில் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வங்கி வழியமைத்துள்ளது.

## ஹேமாஸ் பியவர அர்த்தமுள்ள 20 வருடங்களைக் கொண்டாடுகின்றது - நினைவுப் புத்தகமும் அறிமுகம்



ஹேமாஸ் அவுட்ரீச் மையம் (HOF) அதன் முக்கியத்துவம் வாய்ந்த செயற்றிட்டமான பியவர ஆரம்பிக்கப்பட்டு 20 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதைக் குறிக்கும் வகையில் நினைவுப் புத்தகமொன்றை அறிமுகம் செய்துள்ளது. இலங்கையில் சிறுவர்களின் ஆரம்பப் பிராய பராமரிப்பு மற்றும் விருத்தி (ECCD) என்பதில் கவனம் செலுத்தி முன்னெடுக்கப்படும் தேசியத் திட்டமாக அமைந்துள்ள இந்தத் திட்டத்தினூடாக, அவர்களின் வாழ்நாள் முழுவதுக்குமான பயணத்தில் உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பியவர திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது முதல் தற்போதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ள இந்த நினைவுப் புத்தகம், 20 வருடங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ள 20 பியவர திட்டங்களை உள்வாங்கியுள்ளதுடன், தேசத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள சிறுவர்களுக்கு இரு தசாப்த காலப்பகுதியில் வழங்கியிருந்த ஆதரவு பற்றிய தகவல்களையும் கொண்டுள்ளது. தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் – தனியார்துறையின் வெற்றிகரமான பங்காண்மையின் வலிமை இந்தத் திட்டத்தினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2022ஆம் ஆண்டில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்துடன் இணைந்து ஹேமாஸ் குரூப்பினால் ஆரம்பிக்கப்பட்ட பியவர திட்டத்தினூடாக, குறைந்த வசதிகள் படைத்த சிறுவர்களை இலக்கு வைத்து, அவர்களுக்கு வாழ்க்கையில் உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

## 2023ஆம் ஆண்டில் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் பீனிக்ஸ் நிறுவனம்



வீட்டு உபயோகப் பொருட்கள் உற்பத்தியில் முதன்மையான நிறுவனமாக திகழும் பீனிக்ஸ் நிறுவனம் தமது புத்தம் புதிய உற்பத்திகளை அண்மையில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன வளாகத்தில் காட்சிப்படுத்தி அறிமுகப்படுத்தியுள்ளது. கண்கவர் தோற்றம் மற்றும் பயன்பாடு தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு சர்வதேச தரத்தில் உற்பத்திச் செய்யப்பட்டுள்ள மேற்படி உற்பத்திகளை பல்வேறு வர்ணங்களிலும் நவீன வடிவமைப்புகளிலும் இப்பொழுது வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும். மேற்படி புதிய உற்பத்திகளில் மொடியுலர் களஞ்சியத் தொகுதி பெரும்முக்கியத்துவம் பெறுவதோடு, அது எந்த காலத்துக்கும் எந்தவொரு வேலைக்கும் பொருத்தமான தொனிப்பொருளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு இக்களஞ்சியத் தொகுதியை தமக்கேற்ற அளவில், வரிசைக்கணக்கில், விரும்பிய வர்ணங்களில், எத்தனை கதவுகள் தேவைப்படுகிறதோ அத்தனை கதவுகளுடன் வடிவமைத்துக்கொள்ள முடியும். தமது பிரத்தியேக இரசனைக்கேற்றவாறு வீடுகளுக்கும் அலுவலகங்களுக்கும் மேற்படி களஞ்சியத் தொகுதிகளை வடிவமைத்துக்கொள்ள முடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஏறாவூரில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(கனகராசா சரவணன்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மீராங்கேணி பிரதேசத்திலுள்ள வீடொன்றின் மீது நேற்று முன்தினம் புதன்கிழமை (01) நள்ளிரவு இனம்தெரியாதோரினால் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன்போது வீட்டின் யன்னல், கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டின் உரிமையாளரான முகம்மது செய்யது முகம்மது சவானா என்பவரது மகன் இந்தப் பிரதேசத்தில் போதைப்பொருளை ஒழிக்க வேண்டும் என அவரின் நண்பர்களுடன் இணைந்து போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல்களை வழங்கி வந்துள்ளார்.



இந்நிலையில், சம்பவதினத்தன்று குறித்த வீட்டில் மகன் இல்லாத நேரத்தில் உரிமையாளரும் அவரது தாயாரும் நித்திரைக்குச் சென்ற நிலையில், 12 மணியளவில் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் மேற்கொண்டதையடுத்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்துள்ளதுடன் எவருக்கும் எதுவிதமான காயங்களும் ஏற்படவில்லை என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு ஏறாவூர் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மற்றும் தடயவியல் பிரிவு பொலிஸார் மோப்ப நாய் சகிதம் சென்று விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசின் வரிக்கொள்கைக்கு எதிராக தென்கிழக்குப் பல்கலையில் போராட்டம்!








(கல்முனை செய்தியாளர்)

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய வரி அதிகரிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனயீர்ப்புப் போராட்டம் புதன்கிழமை (01) பல்கலைக்கழக நுழைவாயிலில் இடம்பெற்றது.

இதன்போது அரசு மேற்கொண்டுள்ள பாரிய வரி விதிப்புக்கு எதிராக பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு நீதி கேட்டு கோஷங்களை எழுப்பினர். "அநீதியான வரிவிதிப்பை நிறுத்து, அரசின் ஊழலால் விழுந்தவர்களை வரி ஏறி மிதிக்கிறது, பணத்தை எடுத்தவரிடம் கேட்பதே நீதி எங்களிடம் கேட்பது அநீதி" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு விரிவுரையாளர்கள் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




பின்னர் அரசுக்கும் மக்களுக்கும் தங்களது நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தி கருத்துகளும் தெரிவிக்கப்பட்டன. இதன்போது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்க உயர்மட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு பீடங்களையும் சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் சிரேஷ்ட கனிஷ்ட விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# போதைப்பொருள் தடுப்பு செயலணி கலந்துரையாடல்



(மட்டக்களப்பு)

கோரளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட செம்மண்ணோடை கிராமத்தில் போதைப்பொருள் தடுப்பு செயலணியின் கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்றது.


இக்கலந்துரையாடலில், தற்காலத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான அவசியம் வலியுறுத்தப்பட்டு, அதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது பத்து பேர் கொண்ட போதைப்பொருள் தடுப்பு குழுவை நியமித்தல், நடத்தை பிரள்வுடையவர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் இளவயது திருமணத்தை கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனை வழங்கல், பாடசாலையை விட்டு இடை விலகிய மாணவர்களை மீளச் சேர்த்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்நிகழ்வில், கோரளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்களான முர்ஷித், ரபீக், கலாசார உத்தியோகத்தர் பீர்முஹம்மத், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் அரூஸியா, சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ருஸைத் மற்றும் சமூக, சமய நிறுவனங்களின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மட்டக்களப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் 24 வயது இளம் போதை வியாபாரி கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகர்ப்பகுதி அரசடியைச் சேர்ந்த 24 வயதுடைய இளம் போதை வியாபாரி ஒருவரை 5 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் புதன்கிழமை (01) பிற்பகல் ஏறாவூர் சவுக்கடி பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, சம்பவதினத்தன்று பகல் சவுக்கடி பகுதியில் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இணைந்து சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது மோட்டார்சைக்கிள் ஒன்றில் மட்டக்களப்பிலிருந்து சவுக்கடி பகுதிக்கு வியாபாரத்துக்காக போதைப்பொருளை கொண்டுவந்த நிலையில் விசேட அதிரடிப் படையினர் வியாபாரியை மடக்கிப் பிடித்தபோது அவரிடமிருந்து 5 கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டதுடன், மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றினர்.

இதில் கைதுசெய்யப்பட்டவரையும் சான்றுப் பொருட்களையும் ஏறாவூர் பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன், இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.





75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சூழல் நேய பசுமை வேலைத் திட்டத்தின் கீழ் சிரமதான நிகழ்வுகள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் புதன்கிழமை (01) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார துறை உத்தியோகத்தர்கள், இராணுவ படைவீரர்கள், மாநகர சபை ஊழியர்கள் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணியாளர்கள், இளைஞர் யுவதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (மட்டக்களப்பு)

# நலன்புரி நன்மை பெறும் குடும்பங்களை பதிவுசெய்ய புதிய செயலி அறிமுகம்



(வி.சுகிர்தகுமார்)

அரசினால் வழங்கப்படும் நலன்புரி நன்மைகள், கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள தகுதியான நபர்கள் மற்றும் குடும்பங்களை தெரிவுசெய்வதற்கான முன்மாதிரி கள ஆய்வு தேசிய ரீதியில் நேற்று முன்தினம் (01) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் அக்கரைப்பற்று-7 கீழ் 1 பிரிவில் முன்மாதிரி கள ஆய்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. பிரதேச செயலாளர் வி.பபாகரனின் அறிவுறுத்தலுக்கமைய உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.சுபாகர் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட முன்மாதிரி கள ஆய்வு வேலைத்திட்டத்தை பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஹூசைன்டீன் நெறிப்படுத்தினார்.

அரசினால் வழங்கப்படும் நன்மைகள், கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள தகுதியான நபர்கள் மற்றும் குடும்பங்களை தெரிவு செய்வதற்குரிய ஒழுங்கமைப்பட்ட முறையான கணினி மூலமாக சேகரிக்கப்பட்ட தகவல்கள் இதுவரையில் இல்லாத நிலையில், இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காக அரசினால் கையடக்கத் தொலைபேசி ஊடாக பயன்படுத்தக்கூடிய புதிய செயலி (APP) ஒன்றும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளதுடன், அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பாகவும் களப்பயிற்சியும் செயலியின் பரீட்சார்த்த பரிசீலனை நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இச்செயலியை பயன்படுத்தி ஒவ்வொரு பயனாளிகள் வீடுகளுக்கும் அனுமதியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சென்று தகவல்களை சேகரித்து பதிவுசெய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இக்கள ஆய்வு ஆரம்ப நிகழ்வில் தலைமையக சமுர்த்தி முகாமையாளர் கிருபாகரன், கிராம உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் பரிமளவாணி, சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ரவிச்சந்திரன், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவைகள் உத்தியோகத்தர் உள்ளிட்ட பிரதேச செயலகத்தின் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும்

## தமிழரசுக் கட்சி வேட்பாளர் கலைவாணி கூறுகிறார்



(வெல்லாவெளி செய்தியாளர்)

பாரதி கண்ட புதுமைப் பெண் ஈழத்தில் எப்போதோ தோற்றம் பெற்றுவிட்டாள். தலைவரின் வழிகாட்டலில் அனைத்து துறைகளிலும் எமது பெண்கள் சாதித்து காட்டிய காலம் இருக்கின்றது. அந்த பொற்காலம் மீண்டும் மலர்தல் வேண்டும். மேலும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட வேண்டும் - என தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் கலைவாணி தெரிவித்தார்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை 02ஆம் வட்டாரத்தில் நேற்று வியாழக்கிழமை (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 52 சதவீத வேட்பாளர்கள் பெண்கள். ஆனால், பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுகின்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இந்நிலை மாற்றப்பட வேண்டும். இதை மாற்றவே நான் இத்தேர்தலில் போட்டியிடுகின்றேன். என்னை உங்கள் வீட்டில் ஒருத்தியாக, அம்மாவாக, சகோதரியாக, மகளாக கண்டு வாக்களியுங்கள். இந்த நாட்டில் நிலவிய யுத்தத்தினால் அதிகமான பெண்கள் கணவன்மாரையும், சகோதரர்களையும், பிள்ளைகளையும் இழந்து தாங்களே குடும்பத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். வீட்டை மாத்திரம் அல்ல நாட்டையும் எமது பெண்களால் ஆள முடியும் என்று மீண்டும் புத்தெழுச்சி பெற்றுத் திகழ வேண்டும்.

பல பொருளாதாரக் கஷ்டத்தின் மத்தியில் கண்ணீருடன் தங்களின் குடும்பத்தை வழிநடத்திக்கொண்டிருக்கின்றார்கள். இப்பெண்களின் துயர் துடைக்கப்பட வேண்டும். இன்று வடக்கு, கிழக்கில் வீணர்களின் ஆட்சியால் தமிழ்மக்களுக்கு நீதி, நியாயம், அபிவிருத்தி, வாழ்வாதாரம் மறுக்கப்பட்டுள்ளன. எமது உள்ளூராட்சி மன்றங்களுக்கு பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு வீட்டுக்கு வாக்களியுங்கள் எனக் குறிப்பிட்டார்.

## போடியார் புலம்பல்!



நாளைக்கு இலங்கையின் 75ஆவது சுதந்திர தினம் எலுவா? தமிழருக்கு கைவிலங்கு போட்டு 75 வருடங்கள் எண்டதால நாளை வடக்கு, கிழக்கு முழுவதும் கறுப்பு கொடி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்போறாங்க பல்கலை கழக மாணவர்களும், தமிழ்த் தேசியக் கட்சிகளும்.. ஆனால் தமிழருக்கு தீர்வ வழங்கப்போவதாக போன வருடம் ஊளையிட்ட நரி நாளைக்கு காலிமுகத் திடலில என்ன பேசப்போறாரு எண்டத பாப்பம்..!

# உலக செய்திகள்



## பாகிஸ்தானில் பணவீக்கம் அதிகரிப்பு: பேச்சுவார்த்தைகாக IMF பிரதிநிதிகள் வருகை

**பா**கிஸ்தானில் கடந்த 48 ஆண்டுகளில் இல்லாதளவில் பணவீக்கம் 27.55 சதவீதமாக உயர்ந்துள்ளது.நெருக்கடியான நேரத்தில் கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க IMF பிரதிநிதிகள் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்து, வெளிநாட்டுக் கடன்கள் அதிகரித்துள்ளன. செலுத்தவேண்டிய நிலுவைத் தொகை காரணமாக துறைமுகங்களில் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை நீடித்து வருகிறது.

பாகிஸ்தானின் நாணய மதிப்பு வரலாறு காணாதளவுக்கு சரிந்துள்ளதால், பெற்றோல் மற்றும் எண்ணெய் விலையை உயர்த்தும் நடவடிக்கையில் அந்நாடு ஈடுபட்டுள்ளது.

## இரகசிய ஆவணங்கள் தேடும் எவ்பிஐ பைடனின் இல்லத்தில் மீண்டும் சோதனை



**அ**மெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் கடற்கரை இல்லத்தில், எவ்பிஐ அதிகாரிகள் மீண்டும் சோதனை நடத்தியுள்ளனர்.

துணை ஜனாதிபதியாக பதவி வகித்த காலகட்டத்தைச் சேர்ந்த இரகசிய ஆவணங்களை பதுக்கிவைத்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. டெலவரில் ஜோ பைடனுக்கு சொந்தமான இடங்களில் நடைபெற்ற சோதனையின்போது இரகசிய ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில், டெலவேர் மாகாணத்திலுள்ள ஜோ பைடனின் தனியார் அலுவலகம் மற்றும் கடற்கரை இல்லத்தில் எவ்.பி.ஐ. அதிகாரிகள் 4 மணிநேரத்திற்கும் மேலாக சோதனை நடத்தினர். இந்த சோதனையின்போது இரகசிய ஆவணங்கள் ஏதும் கைப்பற்றவில்லை என ஜோ பைடனின் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

## பாக். பள்ளிவாசல் தாக்குதல்: 101 பேர் பலி; 17 பேர் கைது



**பா**கிஸ்தானின் பெஷாவர் நகர பள்ளிவாசலில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெஷாவர் நகர பள்ளிவாசலில் திங்கட்கிழமை மதிய தொழுகையின்போது தலிபான் பயங்கரவாதியொருவர் தனது உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து நடத்திய இந்தத் தாக்குதலில் 97 பொலிஸார் உட்பட 101 பேர் உயிரிழந்துள்ளனர். 225 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தோரில் பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை, பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் தளபதி உமர் காலித் குராசானி என்பவர், ஆப்கானிஸ்தானில் கடந்த ஓகஸ்ட் மாதம் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கவே பெஷாவர் நகர பள்ளிவாசலில் தாக்குதல் நடத்தியதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆசியாவின் 'நம்பர் 1' பணக்காரர் அந்தஸ்தை இழந்தார் கௌதம் அதானி



**உ**லக பணக்காரர்கள் வரிசையில் 3ஆவது இடத்தில் இருந்த கௌதம் அதானி ஆசியாவின் 'நம்பர் 1' பணக்காரர் அந்தஸ்தை இழந்துள்ளார்.

இந்நிலையில், உலக பணக்காரர்கள் வரிசையில் 9ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ள முகேஷ் அம்பானி, ஆசியாவின் 'நம்பர் ஒன்' பணக்காரர் இடத்தைப் பெற்றுள்ளார்.

சில நாட்கள் முன்பு வரை உலக பணக்காரர்கள் வரிசையில் 3ஆவது இடத்தில் இருந்த கௌதம் அதானி, அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் அறிக்கையை தொடர்ந்து, படிப்படியாக குறைந்து உலக பணக்காரர்கள் வரிசையில் 11ஆவது இடத்தில் இருந்த நிலையில், அதானியின் சொத்து மதிப்பு நேற்று மேலும் குறைந்து 15ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டார். ஹிண்டன்பர்க் ஆய்வறிக்கையின் எதிரொலியாக அதானி குழுமம் இதுவரை ரூ.7.44 இலட்சம் கோடி இழப்பை சந்தித்துள்ளது.

## பார்வையற்றோருக்கு உதவும் ரோபோ நாய்



**க**ண்பார்வை அற்றோருக்காக செயற்கை நுண்ணறிவு திறன்கொண்ட 'ரோபோ நாயை' ஸ்பெயின் ஆய்வாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

'டெஃபி' என்று பெயரிடப்பட்ட இந்த ரோபோ நாய், எதிரே வரும் வாகனங்கள், மனிதர்களை தனித்தனியாக அடையாளம் காண்கிறது.

இதிலுள்ள கெமராக்கள் வீதிகளிலுள்ள சிக்னல்களை புரிந்துகொண்டு கூகுள் மேப் உதவியுடன் சரியாக வழிகாட்டும்.

அலுவலகம், மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குச் செல்வதற்கும் இது பேருதவியாக இருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சூடுபிடிக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களம்

### ட்ரம்பை எதிர்த்து களமிறங்கும் இந்திய வம்சாவளி பெண்மணி



**அ**மெரிக்கா ஜனாதிபதித் தேர்தல் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நிலையில், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை எதிர்த்து, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹாலேவும் களத்தில் குதிக்க முடிவு செய்துள்ளார்.

அடுத்த ஆண்டு நவம்பர் 5ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தற்போதே தேர்தல் களம் சூடுபிடித்து வருகிறது. இம்முறையும் ஜனாதிபதி ஜோ பைடன் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடுகிறார். கடத்த முறை குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்த ட்ரம்ப், இந்த முறையும் அக்கட்சியின் சார்பில் போட்டியிடுவதாக அறிவித்து பரப்புரையையும் தொடங்கிவிட்டார்.

இந்த பரபரப்பான சூழலில் ட்ரம்ப் சார்ந்துள்ள குடியரசு கட்சியின் மூத்த பெண் அரசியல்வாதியும், இந்திய வம்சாவளியையும் சேர்ந்தவருமான நிக்கி ஹாலேவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிக்கி வரும் 15ஆம் திகதி இது குறித்த அறிவிப்பை வெளியிட இருப்பதாக தெரிகிறது.

நிக்கி ஹாலே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது உறுதியானால் குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் ட்ரம்புக்கு எதிரான முதல் வேட்பாளராக அவர் இருப்பார். தெற்கு கெரோலினா மாகாணத்தின் ஆளுநராக 2 முறை பதவி வகித்த 51 வயது நிக்கி ஹாலே கடத்த 2020 ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்பின் தீவிர ஆதரவாளராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய கபடி அணியின் தலைவராக நிந்தவூரைச் சேர்ந்த சஜா

### ஐந்து தமிழ்பேசும் வீரர்களுக்கும் வாய்ப்பு




**ப**ங்களாதேஷில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பங்கபந்து கபடி சம்பியன்ஷிப் தொடருக்காக அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை கபடி அணியின் தலைவராக நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் முன்னணி வீரரான அஸ்லம் சஜா நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், குறித்த தொடருக்காக இலங்கை கபடி சம்மேளனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள 12 பேர் கொண்ட குழாத்தில் அஸ்லம் சஜா உள்ளிட்ட 5 தமிழ் பேசும் வீரர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

3ஆவது பங்கபந்து சர்வதேச கபடி சம்பியன்ஷிப் தொடர் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் எதிர்வரும் மார்ச் மாதம் 11ஆம் திகதிமுதல் 22ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது. இம்முறை போட்டித் தொடரில் பங்களாதேஷ், இலங்கை, இங்கிலாந்து, கென்யா, நேபாளம், ஈராக் மற்றும் இந்தோனேஷியா உள்ளிட்ட 12 நாடுகள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக இலங்கை கபடி அணிக்காக விளையாடி வருகின்ற நிந்தவூரைச் சேர்ந்த அஸ்லம் சஜா இலங்கை கபடி அணியின் தலைவராகவும், அஷான் மிஹிரங்க உப தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் கடந்த ஆண்டு நடைபெற்ற பங்கபந்து கபடி சம்பியன்ஷிப் தொடரில் பங்கேற்ற இலங்கை கபடி அணியின் உப தலைவராக அஸ்லம் சஜா செயல்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிந்தவூர் மதீனா விளையாட்டுக் கழகத்தின் மொஹமட் சபிஹான், மொஹமட் நப்ரீஸ், மட்டக்களப்பு – தன்னாமுனை புனித ஜோசப் விளையாட்டுக் கழகத்தின் ராசோ பென்சி மற்றும் மட்டக்களப்பு கிரீன் கலக்ஷி விளையாட்டுக் கழகத்தின் அமிர்தலிங்கம் மோகன்ராஜ் ஆகியோர் தமிழ்பேசும் வீரர்களாக இடம்பிடித்துள்ளனர்.

இதேவேளை, இலங்கை கபடி அணியின் பயிற்சியாளராக நதீக செல்லஹேவாவும், இந்திரதிஸ்ஸ தேதுனுபிட்டிய அணியின் முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கபடி அணி விபரம்

அஸ்லம் சஜா (தலைவர்), அஷான் மிஹிரங்க (உப தலைவர்), துலான் மதுவந்த, பென்சி ராசோ, நிருத பதிரன, அகில லக்ஷான், மஹீஷிக ஜயவிக்ரம, மொஹமட் நப்ரீஸ், மொஹமட் சபிஹான், உசித ஜயசிங்க, ஏ. மோகன்ராஜ், வசந்த இதுனில்

# விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## சாதனை வெற்றியுடன் T20 தொடரை வசப்படுத்திய இந்தியா

**நி**யூசிலாந்து அணிக்கு எதிரான இருபதுக்கு 20 தொடரின் தீர்மானமிக்க ஆட்டத்தில் இந்திய அணி 168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்று தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்தியா - நியூசிலாந்து அணிகள் இடையிலான 3-வது மற்றும் கடைசி 20 ஓவர் கிரிக்கெட் போட்டி அஹமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தடிய இந்திய அணி 20 ஓவர் முடிவில் அணி 4 விக்கெட்டுக்கு 234 ஓட்டங்கள் குவித்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சுப்மன் கில் அபாரமாக ஆடி கன்னி சதமடித்தார். சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட்டில் இந்தியாவின் 5ஆவது அதிகபட்ச ஸ்கோர் இதுவாகும்.

பதிலெடுத்தாடிய நியூசிலாந்து அணி 12.1 ஓவர்களில் வெறும் 66 ஓட்டங்களில் சுருண்டது. 20 ஓவர் கிரிக்கெட்டில் நியூசிலாந்தின் 2ஆவது மோசமான ஸ்கோர் இதுவாகும். இதன்மூலம் இந்தியா 168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மெகா வெற்றியை சுவைத்தது. சுப்மான் கில் ஆட்டநாயகன் விருதையும், ஹர்திக் பாண்ட்யா தொடர்நாயகன் விருதையும் பெற்றனர்.

இதற்கு முன்பு 2018ஆம் ஆண்டு அயர்லாந்துக்கு எதிராக 143 ரன் வித்தியாசத்தில் வென்றதே 20 ஓவர் கிரிக்கெட்டில் இந்தியாவின் மிகச்சிறந்த வெற்றியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.




## பதவி விலகிய பரிஸ் ஒலிம்பிக் அதிகாரி




**அ**டுத்த ஆண்டு நடைபெறவுள்ள பரிஸ் ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் விளையாட்டு விழாக்களுக்கான விளையாட்டுத்துறை பணிப்பாளர் ஜியேன் பிலிப் கேஷியன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் ஒலிம்பிக் விளையாட்டு விழா ஆரம்பமாவதற்கு 18 மாதங்களே இருக்கின்ற நிலையில், கேஷியன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களைக் காட்டி அவர் விலகிக்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவருக்குப் பதிலாக அப் பதவியை விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளுக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் பிரதி விளையாட்டுத்துறை பணிப்பாளர் ஒரேலி மேர்ல் தொடரவுள்ளார்.

உரிமைத்துவத்துக்கான கோரலுக்கு முன்னர் பரிஸ் 2024 தலைவர் டோனி எஸ்டெங்குவே உட்பட மற்றும் பல முக்கிய அதிகாரிகளுடன் இணைந்து கேஷியன் பல்வேறு செயலமர்வுகளை நடத்தியிருந்தார். பரிஸ் 2024 ஏற்பாட்டுக் குழுவில் மிக முக்கிய பங்காற்றிய அவர் பதவி விலகியது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது என ஏற்பாட்டுக் குழு வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

## இந்தியாவின் கில்லி ஷுப்மன் கில்




(ரமணி)

ஒருநாள், ரி20, டெஸ்ட் என மூன்று வடிவ கிரிக்கெட்டிலும் சதம் அடித்த 5ஆவது இந்திய வீரர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார் தொடக்க வீரர் கில். நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது ரி20 போட்டியிலேயே கில் இந்த சாதனையைச் செய்துள்ளார்.

ஆரம்ப ஓவர்களில் பவுண்டரிகளை விரட்டிக் கொண்டிருந்த அவர் அவ்வப்போது சிக்ஸர்களை பறக்கவிட்டு, அங்கு திரண்டிருந்த ரசிகர்களின் கண்களுக்கு விருந்து படைத்து வாணவேடிக்கை காட்டினார். 36 பந்துகளில் அரைசதமும், 54 பந்துகளில் சதமும் அடித்து மிரட்டினார். அதோடு நின்றுவிடாமல் கடைசிவரை ஆட்டமிழக்கமால் 63 பந்துகளில் 12 பவுண்டரிகள் 7 சிக்ஸர்களை விளாசி 126 ஓட்டங்கள் குவித்தார். இந்த அசத்தல் சதம் மூலம் 3 வடிவ கிரிக்கெட்டிலும் சதம் அடித்த 5ஆவது இந்திய வீரர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார் கில்.

**இந்தியாவுக்காக மூன்று வடிவங்களிலும் சதம் விளாசிய வீரர்கள் பட்டியல்**

சுரேஷ் ரெய்னா
ரோகித் சர்மா,
கே.எல்ராகுல் விராட் கோஹ்லி
ஷுப்மன் கில்

**நியூசிலாந்துக்கு எதிராக அதிக தனிநபர் ஸ்கோர்**

ஒருநாள் போட்டி: ஷுப்மன் கில் (208)
ரி20 போட்டி: ஷுப்மன் கில் (123★)

**ரி20 போட்டிகளில் ஒரு இந்திய வீரரின் அதிகபட்ச தனிநபர் ஸ்கோர்:**

123★ ஷுப்மன் கில் vs நியூசிலாந்து அகமதாபாத் 2023
122★ விராட் கோஹ்லி vs ஆப்கானிஸ்தான் டுபாய் 2022
118★ ரோஹித் சர்மா vs இலங்கை இந்தூர் 2017

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7